விலை: 50.00 Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk




சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2051 மார்கழி 10 வெள்ளிக்கிழமை (25.12.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 006

## வட பகுதியில் நேற்று கொரோனா இல்லை
### முல்லை தனிமைப்படுத்தலில் இருவருக்கு தொற்று உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடம் மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ ஆய்வு கூடங்களில் நேற்று 19

## கொரோனா தொற்றால் மேலும் ஒருவர் மரணம்
### +588 பேருக்கு நேற்று தொற்று

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா உயிரிழப்புகள் தொடர்ந்து வரும் நிலையில் நேற்று மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் உறுதிப்படுத்தியுள்ளார்.

இதையடுத்து 19







## யாழில் தனிமைப்படுத்தப்பட்டவர்களை
# இராணுவம், பொலிஸ் கண்காணிக்க முடிவு
### மாவட்ட செயலக கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் தனிமைப்படுத்தலில் உள்ளோர் வெளியில் நடமாடாதவாறு இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் கட்டுப்படுத்துவதற்கு யாழ். மாவட்ட செயலகக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சுய தனிமைப்படுத்தலில் உள்ளோர் வெளியில் நடமாடுவதை கட்டுப் படுத்துதல் தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் யாழ். மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

குறித்த விசேட கூட்டத்தில வடக்கு மாகாண 19



## மதுச்சாலைகள் இன்று பூட்டு

(கொழும்பு)

இலங்கையில் உள்ள ஹோட்டல்கள் தவிர்ந்த சகல மதுபான சாலைகளும் கிறிஸ்துமஸ் பண்டிகையை ஒட்டி பூட்டப் 19

## விலங்குக்கு வைக்கப்பட்ட மின்சார பொறியில் சிக்கிய
### சிவில் பாதுகாப்பு படை வீரர் பலி
### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவின் மகாகச்சக் கொடி - அலுத்வத்த பகுதியில் நேற்றுக் காலை பாதுகாப்பற்றிருந்த மின் இணைப்பில் சிக்கி சிவில் பாது 19

## எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் திருட்டுக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்
### அவதானத்துடன் இருக்குமாறு பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் நாட்களில் பண்டிகைக்காலம் ஆரம்பமாகவுள்ளதால், குற்றவாளிகள் மற்றும் திருடர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதை காணக்கூடியதாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், இப்பண்டிகை காலங்களில் பயணங்களை மேற்கொள்ளும்போது குற்றவாளிகள் மற்றும் திருடர்களிடமிருந்து விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களை கேட்டுக் கொண் 19

## நாட்டை முடக்குவதற்கான தேவை ஏதும் ஏற்படவில்லை
### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

நாட்டை முடக்குவதற்கான தேவை ஏதும் ஏற்படவில்லை என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 19

### கிளிநொச்சி பெரியகுளத்தில்
## முச்சக்கரவண்டி தடம் புரண்டதில்
### இளம் குடும்பஸ்தர் பலி



(கிளிநொச்சி)

கிளிநொச்சி பெரியகுளம் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த முச்சக்கர வண்டி கால்வாயில் தடம் புரண்ட 19

## மக்கள் பண்டிகைக் காலத்தில் பொறுப்பற்று செயற்பட்டால் நிலைமை கைமீறி விடும்
### சுகாதார பிரிவு எச்சரிக்கை

9ஆம் பக்கம் பார்க்க

### கொக்குவிலில்
## பெண்கள் உட்பட 4 பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.கொக்குவில் - பொற்பதி வீதியில் உள்ள வீடொன்றில் சமூக பிறழ்வான செயற்பாடு இடம்பெறுவதாக கிடைத்த முறைப் 19

## பெண்களின் ஏ.ரி.எம்ஜ திருடி மதுபானம் கொள்வனவு
### யாழில் சந்தேகநபர்களை தேடும் பொலிஸார்

(யாழ்ப்பாணம்)

யாழில் பெண்களின் ஏ.ரி.எம் அட்டைகளைத் திருடி மதுபானம் கொள்வனவு செய்த நபர்களைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் அடைக்கல மாதா கோயிலில் கடந்த 21ஆம் திகதி 19

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 05.06.1924

உதிர்வு 05.01.2012

அமரர்

## கதிர்காமு கந்தவனம்

( இளைப்பாறிய அதிபர் )

அன்பும் பண்பும் பாசமும்
கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே
ஆண்டுகளோ எட்டாகி விட்டன.
ஆனாலும் உங்களது பசுமையான நினைவுகள்
எம் மனதில் என்றென்றும் நிலைத்திருக்கும்.

" ஜெயமலரகம் "
கப்புதூ, கரவெட்டி. (C-1015) குடும்பத்தினர்

## சிறை மோதலை தடுக்க
# சிறப்பு படைப் பிரிவை ஸ்தாபிக்க தீர்மானம்

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் ஏற்படும் மோதல்களை கட்டுப்படுத்த விசேட பிரிவொன்றை ஸ்தாபிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பிரகாரம் இலங்கை இராணுவத்தில் 12 வருட கால சேவையை நிறைவு செய்து ஓய்வு பெற்ற 500 பேரை இந்த பிரிவில் இணைத்துக்கொள்ளவுள்ளதாக அவர் கூறினார்.

அண்மையில் மஹர சிறைச்சாலையில் ஏற்பட்ட களேபர நிலைமையின் போது சிறைக் காவலர்களால் அதனை கட்டுப்படுத்த முடியாமல் போனது.

அனர்த்த நிலையிலேயே அவ்வப் போது, சிறைகளில் ஏற்படும் மோதல் நிலைமைகளை கருத்தில் கொண்டு இத்தகைய விஷேட படையணி ஒன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாகவும் அதன் பிரகாரம் இந்த சிறப்பு படைப் பிரிவு ஏற்படுத்தப்படவுள்ளதாகவும் அரச உயர் மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம)

## சுகாதார விதிகளுக்கு அமைய
# 73 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட அரசு தீர்மானம்

(கொழும்பு)

2021 பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையின் 73ஆவது சுதந்திர தினத்தை கொண்டாட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொரோனா சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய இந்த முறை தேசிய சுதந்திர தின கொண்டாட்டத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச பாதுகாப்பு, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற தேசிய சுதந்திர தின கொண்டாட்ட ஏற்பாடுகளின் முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (ம)


**விற்பனைக்கு**

சீமெந்து கலவை இயந்திரம், சீமெந்து கலவை தூக்கி (HOIST). அலுமினிய BAR வகைகள், மரக் கதிரைகள், கதவுகள், ஜன்னல்கள், ஸ்டீல் மேசைகள், கல் அரிவு இயந்திரம், றோலர் (4 Ton, 2 Ton), மேசை விரிப்புகள், அலுவலக கண்ணாடி மேசை ( EXECUTIVE TABLE), பிளாஸ்ரிக் மேசைகள், கதிரைகள், ஸ்ரூல், வரவேற்பாளர் மேசை ( RECEPTION TABLE ). (C-1014)

**076 317 2383, 077 711 0287**


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



யாழ்ப்பாணம், கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, மட்டக்களப்பு மற்றும் கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சிவபாதம் கடந்த 25.11.2020 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சந்திரமணி சிவபாதம் (ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி) அவர்களின் அன்புக் கணவரும் மொஹான் சுஜீவின் (கனடா) அன்புத் தந்தையாரும் பார்வதி, நாகஅம்பிகாவதி, வல்லிபுரம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகள் மற்றும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் கரவெட்டியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் இன்று (25.12.2020) வெள்ளிக்கிழமை நடைபெறும்.

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட நீதிபதிகள், சட்டத்தரணிகள், மாணவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்களுக்கும் பல்வேறு வகையிலும் உதவி புரிந்தவர்களுக்கும், தொலைபேசி மற்றும் சமூக வலைத்தளங்கள் மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிறப்பு 1952.03.22

இறப்பு 25.11.2020

அமரர்

## மாணிக்கம் சிவபாதம்

[ LL.B. (Sri Lanka), M.Phil (Colombo), Attorny at Law ]

[ சட்டபீட சிரேஸ்ட விரிவுரையாளர் ( ஓய்வுநிலை கொழும்பு பல்கலைக் கழகம்) சட்டத்தரணி ]

" சிவமஹால் "
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.

077 371 5991

குடும்பத்தினர்

(C-987)

# தனிமைப்படுத்தலை மீறிய தவிசாளரை இடைநீக்கம் செய்தார் ஜீவன்



(அக்கரப்பத்தனை)

அக்கரப்பத்தனை பிரதேச சபை தலைவர் கதிர்ச்செல்வனை கட்சியிலிருந்து தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

தனிமைப்படுத்தல் விதிமுறையைமீறி செயற்பட்டதாலேயே அவருக்கு எதிராக இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என இ.தொ.காவின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் தற்போது அம்பாந்தோட்டையிலுள்ள தனிமைப்படுத்தல் நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்நிலையில் அவர் குணமடைந்து வந்ததும் அவரிடம் விளக்கம் கோரப்பட்டு, ஒழுக்காற்று நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஜ-4)

# மணல் அகழ்வைத் தடுக்க சுற்றுக் காவல் நடவடிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகளை தடுக்கும் வகையில் பொலிஸார் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் சுற்றுக் காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இந் நடவடிக்கையின் போது மணல் அகழ்வில் ஈடுபடுத்தப்பட்ட உழவு இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கிளிநொச்சி இரணைமடுக் குளத்தை அண்மித்த பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகள் தடுக்கப்படாவிடின் எதிர்காலத்தில் பாரிய ஆபத்துக்கள் ஏற்படும் அபாயநிலை காணப்படுவதாக மாவட்ட பிரதி நீர்ப்பாசனப்பொறியியலாளர் இராஜகோபுவால் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

அதனையடுத்தே இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோத மணல் அகழ்வுகளை தடுக்கும் வகையில் பொலிஸார் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள அதிகாரிகள் சுற்றுக் காவல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இச் செயற்பாட்டின்போது மணல் அகழ்வில் ஈடுபடுத்தப்பட்ட உழவு இயந்திரம் ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர் ஆகியோரின் உதவியை கொண்டு மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதென ஒருங்கிணைப்புக்குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் பொலிஸார் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் அதிகாரிகள் சுற்றுக் காவல் கடமைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5-4-315)

# பிரதமரின் ஒருங்கிணைப்பு செயலாளர் நியமனம்



(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் ஒருங்கிணைப்புச் செயலாளராக அப்சரி திலகரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.


பொதுஜன பெரமுன கட்சியின் ஆதரவாளரான அப்சரி திலகரத்ன நேற்று முன்தினம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவிடமிருந்து தனது நியமனக் கடிதத்தினைப் பெற்றுக்கொண்டார்.

முன்னாள் கிரிக்கெட் வீரர் ஹஷன் திலகரத்னவின் மனைவியான அப்சரி திலகரத்ன இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணியின் ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் பணியாற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)




புலம்பெயர்ந்து வாழும் ஏழாலையைச் சேர்ந்த சோதிராஜா உமாநிதியின் பங்களிப்பில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் கொரோனா நோயாளர் பிரிவிற்கு சலவை இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. (படம்:- ரவிசாந்)

# அல்லைப்பிட்டியிலும் பரவும் பார்த்தீனியம்



(குப்பிழான்)

ஊர்காவற்றுறை வீதியின் அல்லைப்பிட்டி மூன்றாம் வட்டாரம் முடிவு வீதியில் பொது விடுதிக்கு அண்மையிலுள்ள அரச திணைக்களமொன்றுக்குச் சொந்தமான பள்ளக் காணியில் பருவமழையை அடுத்து பார்த்தீனியச் செடிகள் அதிகமாக வளர்ந்து வருகின்றன.

அல்லைப்பிட்டிப் பிரதேசத்தில் இதுவரை பார்த்தீனியச் செடிகள் இல்லாதிருந்த நிலையில் மேற்படி திணைக்களத்தினர் பள்ளக் காணியை நிரவுவதற்காக கட்ட இடிபாடுகளை வேறொரு பிரதேசத்திலிருந்து கொண்டுவந்து கொட்டியமையால் இந்தப் பிரதேசத்தில் பாரியளவில் பார்த்தீனியச் செடிகள் வளர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த செடிகளை உடனடியாக முற்றாக அழிக்காவிடின் நீர், காற்று, உயிரினங்கள் மூலம் அப்பகுதி விவசாய நிலங்களிலும் பரவினால் பின்னர் குறித்த நச்சுச் செடிகளை அழிப்பது மிகவும் கடினமானவும், தங்கள் விவசாய நிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்படும் அபாயமுள்ளதாகவும் அப்பகுதி விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இதுதொடர்பில் அல்லைப்பிட்டி விவசாயிகள் கடந்த சில தினங்களுக்கு முன் வேலணைப் பிரதேச செயலகத்துக்குச் சென்று அறிவித்த நிலையில் பிரதேச செயலர் இது தொடர்பில் தீர்வு பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-4-5-18)

# உவர் நீர்த்தடுப்பணை அமைக்க அனைவரும் முன்வர வேண்டும்

## நகரசபை உறுப்பினர் கோரிக்கை



(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட மகிழங்கேணிக் கிராமத்தில் உவர் நீர்த்தடுப்பணை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் க.தர்சன் கோரிக்கை விடுத்துள்ளார். அண்மையில் சாவகச்சேரி நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,


சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் கடற்கரையை மிக அண்மித்துக் காணப்படும் மகிழங்கேணி மற்றும் உதயசூரியன் கிராமங்கள் மாரி காலத்திலும், இயற்கை அனர்த்தங்களின் போதும் வெகுவாகப் பாதிக்கப்படுகின்றன.


மகிழங்கேணி கிராமத்திற்குள் கடல்நீர் உட்புகுதல் வருடா வருடம் இடம்பெற்று வருகிறது.

இதனால் அங்கு தற்காலிக கொட்டில்கள் மற்றும் அரை குறை வீடுகளில் வசித்து வரும் நாற்பதுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து சன சமூக நிலையம், உறவினர்கள் வீடு மற்றும் பாடசாலைகளில் தஞ்சமடைய வேண்டிய நிலை ஏற்படுகிறது. இம் மக்கள் படும் துயரத்தைப் போக்க சகலரும் கட்சி பேதமின்றி ஒன்றிணைய வேண்டும். 2021 ஆம் ஆண்டில் மகிழங்கேணி கிராமத்தில் உவர் நீர்த்தடுப்பணை அமைக்க அனைவரும் முன்வர வேண்டும்.

அத்துடன் மகிழங்கேணி கிராமத்தில் உள்ள ஐந்து கடல் இணைப்பு வீதிகளில் இரண்டு வீதிகள் எனது நகரசபை ஒதுக்கீடு மூலமாக எதிர்வரும் வருடம் புனரமைக்கப்படவுள்ளன. மீதி மூன்று கடல் இணைப்பு வீதிகளையும் புனரமைக்க ஏனைய சபை உறுப்பினர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென அவர் கேட்டுக்கொண்டார். (5-4-30)

# நெதர்லாந்து, துருக்கி தூதுவர்களுடன் வெளியுறவு அமைச்சர் சந்திப்பு





(கொழும்பு)
நெதர்லாந்து தூதுவர் திருமதி.தன்ஜா கொங்க்கிரிஜ்ப் மற்றும் துருக்கியின் தூதுவர் திருமதி.ஆர்.டெமெட் செக்கர்சி யோக்லு ஆகியோரை வெளியுறவு அமைச்சர் தினேஷ் குணவர்த்தன அண்மையில் சந்தித்து தற்போதைய ஒத்துழைப்பின் பல பகுதிகள் குறித்து கலந்துரையாடினார்.

வட மாகாணம் மற்றும் களுத்துறை மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலைகளை மேம்படுத்துவதற்காக நெதர்லாந்து அரசாங்கம் வழங்கிய தாராள உதவிகளுக்காக வெளியுறவு அமைச்சர் தனது பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

கிராமப்புறங்களில் பாலங்கள், நீர் சுத்திகரிப்பு நிலையங்களை நிர்மாணித்தல், தொழிற் பயிற்சி மற்றும் தொல்பொருள் தளங்களிலான மறுசீரமைப்புப் பணிகள் ஆகியவற்றுக்கான நெதர்லாந்தின் தொடர்ச்சியான உதவிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. (ஜ-4)

# மேல் மாகாண எல்லையைக் கடக்காமல் போக்குவரத்து கட்டுப்பாடுகளை பிறப்பிக்கவும்

## சுகாதார பணிப்பாளர் சங்கம் கோரிக்கை

(கொழும்பு)
மேல் மாகாணத்தினுள் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்படுவதால் புதுவருட காலத்தில் மாவட்ட எல்லையைக் கடப்பதை தவிர்ப்பதற்காக போக்குவரத்து கட்டுப்பாடுகளைப் பிறப்பிக்குமாறு இலங்கை பொதுச் சுகாதார பணிப்பாளர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போது குறித்த சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு மூன்று குழுக்கள் ஆபத்தான விபத்தில் பயணத்தை முன்னெடுக்கவுள்ளதை அவதானித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அவர்களுள் முதலாவதாக மேல் மாகாணத்தில் கடமையாற்றும் வேறு மாவட்ட ஊழியர்கள் எனவும் அவர்கள் இப்போதே அவர்களது வீடுகளுக்குச் செல்ல ஆரம்பித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்ததாக வேறு பகுதிகளில் இருந்து மேல் மாகாணத்திற்கு பொருட்கள், சேவைகளைப் பெற்றுக்கொள்ள வருபவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் மூன்றாவதாக மேல் மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்கள் தற்போது வேறு பகுதிகளுக்கு சுற்றுலாக்களை மேற்கொள்வதன் ஊடாகவும் அதிக அபாயம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# கைதுகள்

## மது போதையில் வாகனம் செலுத்திய......

(கொழும்பு)
மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றச்சாட்டுக்காக பொலிஸ் போக்குவரத்து சிறப்பு நடவடிக்கையில் 350 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மதுபோதையில் வாகனத்தை செலுத்துதல் மற்றும் போக்குவரத்து விதிமுறைகளை மீறும் நபர்களை அடையாளம் காண நாடு முழுவதும் 9,000 பொலிஸ் பணியாளர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக நாடு முழுவதும் 494 பொலிஸ் நிலையங்களுக்கு ஒரு இலட்சத்து 30 ஆயிரம் மூச்சுப் பரிசோதனை கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால் அவர்களின் சாரதி அனுமதி உரிமத்தை இரத்துச் செய்வதுடன் 25 ஆயிரம் ரூபா அபராதமும் சிறைத் தண்டனையும் அனுபவிக்க நேரிடும் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். (ஜ-2)

## முகக் கவசம் அணியத்தவறிய......

(கொழும்பு)
முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுடன் நிறைவடைந்த காலப்பகுதியில் 35 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் 1,740 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஜ-2)

## வாடகைக்காரை அடகு வைத்த......


(கொழும்பு)
வாடகை அடிப்படையில் கார் ஒன்றை பெற்று அதனை அடகு வைத்து மோசடியில் ஈடுபட்ட நபர் ஒருவரை கைது செய்ததுடன் அநுராதபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

கண்டி பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரால் சிலாபம் பகுதியைச் சேர்ந்த நபரிடம் 70 ஆயிரம் மாதாந்த வாடகை அடிப்படையில் கார் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

எனினும், காரை வாடகைக்கு பெற்றவர் தலைமறைவாகியுள்ளதாக அநுராதபுரம் பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்ற நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

சந்தேக நபரை அநுராதபுரம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஜ-2)

# மது உற்பத்திக்கு அனுமதி



(கொழும்பு)
நடப்பு அரசாங்கம் நான்கு புதிய மது உற்பத்தி அனுமதிப் பத்திரங்களை வழங்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துநில அமரசேன குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

இது பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் "மத்தட தித்த" என்ற போதைப்பொருட்களைக் கட்டுப்படுத்தும் திட்டத்துக்கு முரணானது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மதுபானங்களை பாரியளவில் உற்பத்தி செய்வதற்காக இந்த 4 அனுமதிகளும் வழங்கப்படவுள்ளன.

இதில் இரண்டு அனுமதிகள் அதிக செறிவைக்கொண்ட மதுபான உற்பத்திக்கானது.

ஏனைய இரண்டும் பியர் உற்பத்திக்கானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நான்கு அனுமதிப் பத்திரங்களும் நிதியமைச்சரான பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் அனுமதிக்காக தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அதிக செறிவைக் கொண்ட மதுபான உற்பத்தி மையத்தின் ஆலை ஒன்று விரைவில் பாசிக்குடாவில் நிறுவப்படவுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ஜ-2)

# முஸ்லிம்களுக்கு சோதனைகள் மிகுந்த காலகட்டம் இது

## பிரார்த்திப்போம் என்கிறார் இம்ரான்



(கொழும்பு)
இலங்கை வாழ் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை இது சோதனைகள் மிகுந்த காலகட்டம். நமது நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்படும் காலகட்டம். உரிமைகள் நசுக்கப்படும் காலகட்டம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹரூப் தெரிவித்துள்ளார்.

ஜனாஸாக்கள் பலவந்தமாக எரிப்பு, கொரோனா அச்சுறுத்தல், மழை வெள்ள அனர்த்தம் போன்றவற்றுக்கு முகங்கொடுக்கும் இந்த இக்கட்டான கால கட்டத்தில் நமது பிரார்த்தனைகளை அதிகப்படுத்திக் கொள்வோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இந்த விடயத்தினைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வாழ் முஸ்லிம் மக்களைப் பொறுத்தவரை இது சோதனைகள் மிகுந்த காலகட்டம். நமது நியாயமான கோரிக்கைகள் மறுக்கப்படும் காலகட்டம். உரிமைகள் நசுக்கப்படும் காலகட்டம். இவற்றுக்கு மேலாக கொரோனா, வெள்ளம் போன்ற அச்சுறுத்தல்கள்.

எனவே, இந்த சோதனைகளில் இருந்து விடுபட நாம் இறை நெருக்கத்தை அதிகப்படுத்திக் கொள்ள வேண்டும். நாம் விட்ட சில தவறுகள் இந்த சோதனைகளுக்கு காரணமாக இருக்கலாம். எனவே, அவற்றுக்காக அடிக்கடி பாவமன்னிப்புத் தேடிக்கொள்வோம். நமது கோரிக்கைகளை பிரார்த்தனைகள் ஊடாக இறைவனிடம் ஏத்தி வைப்போம்.

நமது தேவைகள், கோரிக்கைகளை இறைவனிடம் முன்வைக்க நல்லதொரு சந்தர்ப்பம் இது. இந்த சந்தர்ப்பத்தை சிறப்பாக பயன்படுத்திக் கொள்வோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில்

(கொழும்பு)

நாட்டில் போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பண்டிகைக் காலத்தில் இவ்வாறு போலி நாணயத்தாள்கள் புழக்கத்தில் விடப்பட்டுள்ளதாகவும் எனவே நாணயத்தாள்களைப் பயன்படுத்துபவர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்குமாறும் குறிப்பிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பியகம பிரதேசத்தில் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான போலி நாணயத்தாள்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ஐ-4)

# கண்டியில் கொரோனா

(கண்டி)

மத்திய மாகாணத்தில் கொவிட் 19 தொற்றாளர்களின் எண்ணிக்கை 1,400 ஐ கடந்துள்ளதாக, கொவிட்-19 ஒழிப்புக்கான தேசிய செயலணி தெரிவித்துள்ளது.

நேற்றுக் காலை வரை 1,423 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். புதிய தொற்றாளர்களாக 80 பேர் பதிவாகியுள்ளனர். (ஐ-2)

# ஒருவர் கொலை

(கொழும்பு)

ஹோமாகம, மாரும்பு பகுதியில் பெண் ஒருவர் தாக்கியதில் நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இருவருக்கும் இடையில் இடம்பெற்ற வாய்த்தர்க்கத்தினால் இந்தத் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

குறித்த நபரின் கழுத்தை வயர் ஒன்றினால் நெரித்துக் கொலை செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# மேலும் சில பகுதிகள் தனிமைப்படுத்தல்


(கொழும்பு)

அவிசாவளை, கொஸ்கம மற்றும் ருவான்வெல்ல பொலிஸ் பிரிவுகளில் உடன் அமுலுக்கு வரும் வகையில் தனிமைப்படுத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அவிசாவளை பகுதியில் நேற்று முன்தினம் 99 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# எம்.ஜி.ஆரின் 33 ஆவது நினைவு தினம்





(யாழ்ப்பாணம்)

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சரும் தென்னிந்திய பிரபல நடிகருமான எம்.ஜி. இராமசந்திரனின் 33 ஆவது நினைவு தினம் நேற்று யாழில் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.கல்வியங்காடு பகுதியில் அமைந்துள்ள எம்.ஜி.ஆர்.சிலைக்கு, எம்.ஜி.இராமசந்திரனின் நண்பனும் தீவிர ரசிகனுமான சுந்தரலிங்கம் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார்.

அதனைத் தொடர்ந்து முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் கோப்பாய் பிரதேச சபை உறுப்பினர் இராசேந்திரம் செல்வராஜா ஆகியோர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். (ஐ-5-33)

## கண்ணீர் அஞ்சலி



அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவின் 55 ஆவது, 56 ஆவது, 76 ஆவது, 77 ஆவது, பொதுச் செயலாளர், 81 ஆவது, 82 ஆவது தலைவர்

அமரர்.கலாபூஷணம் சைவப்புலவர்

**சதாசிவம் உருத்திரேஸ்வரன்** (B.A.,J.P(WI))

கலையின் சிகரமே சாய்ந்தது ஏனோ
கவலை மிகுதியில் வாடுகிறோம் நாமே
ஊர் பற்றும் மிகுதியாய் கொண்டவரே
உலக வாழ்வதை விடுத்துச் சென்றீரே

கலாபூஷணமே நாடகக் கலைஞனே பாரும்
கண்ணீருடன் அரியாலை அன்னை நிற்பதை
காலனின் பிடியதில் யாரும் விலக்கில்லை
கடவுளின் காலடியில் அமரருள் ஒருவராவீர்

அரியாலை சுதேசியத்தில் பெரும் பதவியாளனே
அரியாலையை அலங்கரித்த சமூக சேவையாளனே
ஆயுள் கணக்கு முடிந்ததோ உமக்கு
ஆண்டவன் மடியில் சாந்தியடைய வேண்டுகிறோம்.

அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தனை செய்கிறோம்.

(C-1008)

அரியாலை மக்கள் சார்பாக,
அரியாலை சுதேசிய திருநாட் கொண்டாட்ட 101 ஆவது விழாக்குழு.

## துயர் பகிர்கின்றோம்

வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர்
லயன்.கோபாலகிருஷ்ணன் கண்ணதாசன்
(வைஷ்ணவி நகைப்பூங்கா உரிமையாளர்)
அவர்களின் பாசமிகு தாயார்

அமரர்.**கோபாலகிருஷ்ணன் நவமணி**

அவர்களின் மரணச் செய்தியைக்
கேள்வியுற்று மிகுந்த கவலையும்
வேதனையும் அடைகின்றோம்.
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர், உறவினர் அனைவருக்கும்
ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு
அமரரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



மண்ணில்:- 11.02.1942
விண்ணில்:- 22.12.2020

வடமராட்சி லயன்ஸ் கழக உறுப்பினர்கள்,
பருத்தித்துறை.

(C-1011)

## கண்ணீர் அஞ்சலியும் பிரார்த்தனையும்

அமரர்.ஸ்ரீமான்.
**சதாசிவம் உருத்திரேஸ்வரன்**



அவர்கள் 23.12.2020 அன்று சிவபதமடைந்தார் என்ற செய்தி கேட்டுத்திடுக்குற்றோம். அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்தனை செய்கின்றோம். தும்பளை, நெல்லண்டைப் பத்திரகாளியம்மன், இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீவீரமாகாளியம்மன் வடபத்திரகாளியம்மன் ஆறுதல் அளிக்க பிரார்த்தனை செய்கின்றோம்.


இங்ஙனம்:
சிவஸ்ரீ.தியாக.சோமாஸ்கந்தராஜக் குருக்கள்,
ஆதீனஹர்த்தா,
நெல்லண்டைப் பத்திரகாளியம்மன் கோவில்,
தும்பளை, பருத்தித்துறை.

(C-1010)

## துயர் பகிர்வும் கண்ணீர் அஞ்சலியும்

அமரர்.ஸ்ரீமான். **சதாசிவம் உருத்திரேஸ்வரன்**

எமது சட்ட ஆலோசகர் பிரபல
சட்டத்தரணி விஜயராணி
உருத்திரேஸ்வரன் அவர்களின்
பிரியமான கணவர்
ச.உருத்திரேஸ்வரன் அவர்கள்
காலமான செய்தி கேட்டுத்
துயரடைகிறோம்.
அவரின் ஆத்மா சாந்தயடைய நாம்
அனுதினமும் வழிபாடு செய்கின்ற
வல்வெட்டித்துறை ஸ்ரீமுத்துமாரியம்
மனை வேண்டிக் கொள்கின்றேன்.




சிவஸ்ரீ.சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (J.P.)
(வல்வெட்டித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் பிரதமகுரு)
ஆதீனஹர்த்தா, புற்றளைப் பிள்ளையார் கோவில்.

(C-1009)

## எழுதுமட்டுவாழில்

# வெடிக்காத நிலையில் இரண்டு எறிகணைகள்



(சாவகச்சேரி)

தென்மராட்சி-எழுதுமட்டுவாழ் தெற்கு பகுதியில் உள்ள காணி ஒன்றில் இருந்து வெடிக்காத நிலையில் இரண்டு எறிகணைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

காணியைத் துப்புரவு செய்யும் போது குறித்த எறிகணைகள் அடையாளம் காணப்பட்டன.

இது தொடர்பாக காணியின் உரிமையாளரினால் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (5-4-30)

# இணைய வழிக் கற்கை மாணவர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்

## அரச அதிபர் மகேசன்



(யாழ்ப்பாணம்)

கொரோனா அச்ச சூழ்நிலையில் இணைய வழிக் கற்கை மாணவர்களுக்கு கிடைத்திருக்கும் ஓர் வரப்பிரசாதம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திறன் வகுப்பறைத் தொகுதிகளுக்கான மடிக்கணனி வழங்கும் நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது கல்வி அமைச்சு பல்வேறுபட்ட திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. அத்துடன் நவீன தொழில்நுட்பத்தை பாடவிதானத்திற்குள் பிரயோகிக்கும் செயற்பாடும் கடந்த இரண்டு மூன்று வருடங்களாக இடம்பெற்று வருகிறது. அந்தச் செயற்பாடு தற்போது யாழ். மாவட்டத்தில் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

அதற்கு தேவையான பங்களிப்பினை கல்வி அமைச்சிற்கு மேலதிகமாக மாவட்ட செயலகம், கடந்த கால புனர்வாழ்வு அமைச்சு மற்றும் தற்போது அந்த அமைச்சின் ஓர் பகுதியாக இருக்கும் அமைச்சு ஆகியன வழங்கி வருகின்றன.

இம்முறை யாழ்.மாவட்டத்தில் உள்ள 120 பாடசாலைகளுக்கு மடிக் கணனிகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். அதன் முதற்கட்டமாக தற்போது 15 பாடசாலைகளுக்கு மடிக்கணனிகள் வழங்கப்படுகிறன.

அத்துடன் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் ஒரு தொகுதி மடிக்கணனிகள் பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

கடந்த பெப்ரவரி மாதத்திற்கு பின்னர் கொவிட் காலத்தில் இணைய வழிக் கற்பித்தல் இடம்பெற்று வருகிறது.

ஆகவே மாணவர்களுக்கு குறித்த செயற்றிட்டம் ஓர் வரப்பிரசாதமான நிலையாகக் காணப்படுகிறது.

எதிர்காலத்திலும் மேலதிகமாக பாடசாலைகளை உள்வாங்கி இவ்வாறு மடிக் கணனிகளை வழங்கும் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளோம்என அவர் மேலும் தெரிவித்தார்.(5-4-30)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் தேசிய தொழில் தகைமை மட்டம் 5,6 இன் I,II,III ஆம் ஆண்டிற்கான (NVQ Level - 5&6, Semester - I,II,III) பரீட்சை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி இறுதிப் பரீட்சை - 2020 டிசெம்பர் ஆகிய பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எனவே பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் விண்ணப்ப படிவங்களை தொழில்நுட்பவியல் கல்லூரியின் பரீட்சைப்பகுதியில் பெற்று எதிர்வரும் 09.01. 2020 ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பரீட்சைப் பகுதியில் சமர்பிக்குமாறு யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியின் பணிப்பாளர் எஸ். முகுந்தன் அறிவித்துள்ளார்.(5)

# வலி.கிழக்கு பிரதேச சபையின் ஏகமனதான தீர்மானங்கள்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கிழக்குப் பிரதேசத்தில் அச்செழு அம்மன் வீதியைப் புனரமைப்பதற்கான வீதி அபிவிருத்தி அதிகார அனுமதி வழங்க வேண்டுமாயின் வீதி அபிவிருத்தி அதிகார சபை தங்கள் தவறுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என சபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ் அமர்வில் தவிசாளர் தியாகராஜா நிரோஷினால் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அச்செழு அம்மன் வீதிப் புனரமைப்பு விடயம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது சபையில் அமளிதுமளி ஏற்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக தவிசாளரினால் அவையில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த பதாகை அகற்றப்பட்டது.

இந்நிலையில் உரியவாறு அனுகி தீர்வொன்றைப் பெற்றிருக்க வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு வாய்ப்பிருக்கையில் தேவையற்ற முறைப்பாடு ஒன்றைச் செய்து தவிசாளரைக் கைது செய்யும் முயற்சிகள் நடைபெற்றுள்ளன. இவற்றை வன்மையாகக் கண்டிப்பதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இடம்பெற்ற முறைகேடுகளுக்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்புக்கூற வேண்டும்.

தவறுக்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும். அவ்வாறான நிலையிலேயே இவ் விடயத்திற்கு ஆதரவைத் தருவோம் என சபையில் ஒருமித்து கருத்துக்களை முன்வைத்தனர்.

இதனால் அவையில் முறுகல் நிலைமையும் ஏற்பட்டது.

இந்நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபை தமது வருத்தத்தினைத் தெரிவிக்கும் பட்சத்திலேயே குறித்த வீதிப்புனரமைப்பு கோரிக்கையினை ஆராய முடியும் என்பது தவிசாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதேவேளை வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் ஏற்கனவே கோரப்பட்ட நான்கு வீதிகளுக்கான புனரமைப்புக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு அனுமதி வழங்க ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.(5-4)

# 15 பாடசாலைகளுக்கு மடிக்கணனிகள் வழங்கி வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள 15 பாடசாலைகளுக்கு, திறன் வகுப்பறைத் தொகுதிக்கான மடிக்கணனிகள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தலைமையில் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்வில் பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளரும், யாழ்.மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுவின் இணைத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் பிரதம விருந்தினராக கலந்துக கொண்டு மடிக்கணனிகளை வழங்கி வைத்தார்.

யாழ்.மாவட்டத்தில்.ஏற்கனவே சுமார் 268 பாடசாலைகளுக்கு திறன் வகுப்பறைத் தொகுதிக்கான மடிக்கணனிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும், குறிப்பாக தீவகம் கல்வி வலயத்தில் சுமார் 80 விகிதமான பாடசாலைகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளதாகவும் மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந் நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மேலதிக அரசாங்க அதிபர் (காணி) எஸ்.முரளிதரன் மற்றும் தீவக வலய பிரதி கல்விப் பணிப்பாளர்கள், மாவட்ட செயலக உத்தி யோகத்தர்கள், அதிபர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.(5-4-33)






**சுனாமியினால் உயிரிழந்தவர்களின் நினைவு தினத்தை முன்னிட்டு வடமராட்சி கிழக்கு உடுத்துறை சுனாமி நினைவாலயத்தை மக்கள் துப்புரவு செய்தனர்.**

(படம்:-நெடுங்கீரன்)

# மற்றுமொரு ஆடைத் தொழிற்சாலையில் 10 ஊழியர்களுக்கு கொரோனா தொற்று

(ஹற்றன்)

வட்டவளையில் அமைந்துள்ள ஆடைத்தொழிற்சாலை ஒன்றில் ஊழியர்கள் 10 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து. குறித்த ஆடைத் தொழிற்சாலை தற்காலிகமாக மூன்று நாட்களுக்கு மூடப்பட்டுள்ளதாக பொது சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை வெளியாகிய பி.சி.ஆர்.அறிக்கையில் நான்கு ஆண்களுக்கும், ஆறு பெண்களுக்குமாக 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி வட்டவளை ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்த வட்டவளை மவுண்ஜின் தோட்டத்தை சேர்ந்த இளைஞன் ஒருவருக்கு தொற்று உறுதியானதை யடுத்து அவரோடு தொடர்பை பேணிய 60 பேருக்கு கடந்த 17 ஆம் திகதி பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் அறிக்கை நேற்று முன்தினம் மாலை வெளியாகிய போது குறித்த பத்து பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, ஏற்கனவே பி.சி. ஆர்.பரிசோதனை செய்த 60 பேரின் குடும்பங்களை சேர்ந்த 200 பேர் வரையில் தொடர்ந்து சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஜ-2)

# றொஹான் பெலவத்த சஜித் தரப்புடன் இணைவு

(கொழும்பு)

பிரபல சட்டத்தரணியும், வர்த்தகரும், கடந்த ஜனாதிபதித்தேர்தலில் சோசலிச ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருமான றொஹான் பெலவத்த ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டுள்ளார்.

நேற்றையதினம் அவர் ஐக்கிய மக்கள் சக்தியில் அதிகாரபூர்வமாக இணைந்து கொண்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவை றொஹான் பெலவத்த நேற்று சந்தித்துள்ளார்.

பெலவத்த ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவில் இணைத்துக் கொள்ளப்படுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கட்சியின் வெளிவிவகாரம் மற்றும் வெளிநாட்டு வர்த்தக பிரிவு பெலவத்தவிடம் ஒப்படைக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-2)




விற்பனை முகவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.
போத்தலுடன் 175 ரூபாக்கள் மட்டுமே
உங்கள் வாசல் வரையான சேவை
எமது நிறுவனத்திற்கு விற்பனை பிரதிநிதிகள் தேவை


# லோஞ்சர் ரக குண்டு மீட்பு



(அம்பாறை)

வெடிக்காத நிலையில் காணப்பட்ட லோஞ்சர் ரக குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

அம்பாறையின் திருக்கோவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கஞ்சிக்குடிச்சாறு பிரதேசத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை பொதுமக்கள் வழங்கிய தகவல் ஒன்றிற்கமைய காணி ஒன்றில் இருந்து குறித்த குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட ஜி.ரி.ஜி.எம்.எம் 40 குண்டினை அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற உத்தரவிற்கமைய செயலிழப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஜ-2)

# சட்டத்தை மீறி மக்கள் நடமாட்டம்

(கொழும்பு)

மக்கென பிரதேசத்துக்கு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுகின்றனர் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

வீதித் தடைகள் இடப்பட்டு பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

எனினும் பொலிஸார் பாதுகாப்பு கடமையில் இல்லாத நேரங்களில் பொது மக்கள் வீதிகளில் நடமாடுவதாக அப்பகுதியின் சில பேரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)


BRITISH COLLEGE OF ENGLISH
IELTS
OUR TARGET IS BAND : 09
ACADEMIC
GENERAL
LIFE SKILLS - A1/ B1
* வகுப்புக்கள் BRITISH COUNCIL லில் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரினால் நடாத்தப்படுகின்றன.
* நாங்கள் IELTS - Registration Centre for British Council
மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.
BRITISH COLLEGE OF ENGLISH
Palay Road, Urumpirai. (உரும்பிராய் பெற்றோல் செற்றிற்கு முன்னால்)
Tel: 021 222 0384, 077 880 3887
(c-996)


# 40 பேருந்துகளின் அனுமதி இரத்து

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் 40 பேருந்துகளின் அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்ய தீர்மானித்துள்ளதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

இது குறித்து எதிர்வரும் காலங்களில் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# அங்கொட லொக்காவின் துப்பாக்கிகள் கைக்குண்டுகள் மீட்பு

(கொழும்பு)

முல்லேரியா பகுதியில் பாதாள குழு தலைவரான அங்கொட லொக்காவுக்கு சொந்தமான துப்பாக்கிகள், கைக்குண்டுகள் மற்றும் மகசின்கள் என்பன பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட செலிஹினி மாவத்தையில் நேற்று முன்தினம் புதன்கிழமை பொலிஸ் விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இந்த ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த பகுதியில் புதைக்கப்பட்டிருந்த , ஜேர்மன் நாட்டு துப்பாக்கி, துருக்கி நாட்டு துப்பாக்கி ஒன்றும், 30 கைக்குண்டுகளை போட்டு வைக்கக் கூடிய மகசினொன்றும், 15 கைக்குண்டுகளை வைக்கக்கூடிய மகசின்கள் மூன்றும் மற்றும் 14 கைக்குண்டுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சட்டவிரோத ஆயுதங்கள் இந்தியாவில் உயிரிழந்ததாகக் கூறப்படும் பாதாளக்குழு தலைவரான அங்கொட லொக்காவுக்கு சொந்தமானது என்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் சந்தேகிக்கின்றனர். இந்த நவீன தரத்திலான துப்பாக்கிகள் எம் நாட்டு பாதுகாப்பு படையினரிடம் கூட இல்லை என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். இந்த துப்பாக்கிகள் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ஜ-2)


மணிவிழா நாயகியை அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

திருமதி.ச.குணராசா
சேவைக்காலம் 28 வருடங்கள்
அகவை அறுபதினை உவகையுடன் தொட்டுநிற்கும் எமது பாடசாலை ஆசிரியை திருமதி ச.குணராசா அவர்களின் ஒய்வுக்காலம் சிறப்புற நீடூழி காலம் எண்ணம் போல் இனிதுவாழ இறைவனை வேண்டுகின்றோம்.


பாராட்டி வாழ்த்துகின்றோம்

புலமைப்பரிசில் 2020 பரீட்சையில் சித்தியடைந்த
செல்வன் சாந்தகுமார் சயன்சன்
புள்ளி - 163
மாணவனையும் பாடசாலை சார்பில் பாராட்டி நிற்கின்றோம்.
(4980)

பாடசாலைச் சமூகம்: யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.க. பாடசாலை

# மரத்தை அகற்றப் போய் மாட்டிய 'பெக்கோ'

## சாரதி காயம்



(தருமபுரம்)

ஊழவனூர் பகுதியில் தனியார் ஒருவரின் காணி நேற்று முன்தினம் ஜே.சி.பி. வாகனம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இதன் போது 50 வருடம் பழைமை வாய்ந்த மரம் ஒன்றை அகற்றும் பொழுது அம் மரம் அகற்றும் பணி யிலீடுபட்டுக் கொண் டிருந்த இயந்திரத்தின் மீது வீழ்ந்ததில் இயந்திரத்தினை இயக்கியவர் இயந்திரத்தினுள் சிக்கிக்கொண்டார்.

பின்னர் அயலவர்களின் உதவியுடன் பல மணி நேரப் போராட்டத்தின் பின்னர் இயந்திரத்தினுள் சிக்குண்டவர் காயங்களுடன் மீட்கப்பட்டார். மீட்கப்பட்டவர் தருமபுரம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். காயமடைந்தவர் கிளிநொச்சி ஸ்கந்தபுரத்தைச் சேர்ந்தவராவார்.(5-4-316)

# இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரமந்தனாறு பகுதியில் இடியன் துப்பாக்கியுடன் நேற்று முன்தினம் ஒருவர் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டார்.

இராணுவத்தினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கமைய மேற்படி கைது இடம் பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை தருமபுரம் பொலிஸாரிடம் இராணு வத்தினர் ஒப்படைத்தனர்.

பொலிஸார் சந்தேக நபரை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கை மேற்கொண்டனர். (5-4-316)



**லண்டன் என்பீல்ட் நாகபூஷணி அம்பாள் ஆலயத்தின் தாயின் நிழல் எனும் தாயக உதவித்திட்டத்தின் கீழ் வவுனியா சுதந்திரபுரம் மற்றும் தரணிக்குளம் பகுதிகளில் வசிக்கும் வறுமை நிலையிலுள்ள வயோதிபக் குடும்பங்களுக்கான உடு புடைவைகள் வழங்கப்பட்டன. (படம்:-சதீஸ்)**

# இருவர் கைது

(தருமபுரம்)

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரு வேறு குற்றச் செயல்க ளில் ஈடுபட்ட இருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தருமபுரம் பகுதியில் நேற்று முன்தினம் கசிப்பு விற்பனையில் ஈடுபட்ட ஒருவரும் புளியம் பொக்கணை பகுதியில் நேற்றையதினம் சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர். (5-4-316)

# ஒரு இலட்சம் காணி பகிர்ந்தளிப்பில் மக்கள் தேவை கவனிக்கப்பட வேண்டும்

## பச்சிலைப்பள்ளி தவிசாளர்

(கிளிநொச்சி)

ஒரு இலட்சம் காணித் துண்டுகள் வழங்கும் செயற்றிட்டத்துக்கு காணிகளை அடையாளப்படுத்தும் போது கிளிநொச்சி மாவட்டத்தில் காணியற்ற மக்களின் தேவைகளையும் மாவட்டத்தின் எதிர்கால காணி தேவைகளையும் கருத்தில் எடுக்க வேண்டும் என பச்சிலைப் பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன் மாவட்ட செயலரிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

இளம் தொழில் முனைவோர்களுக்கு ஒரு இலட்சம் காணித் துண்டுகளை முதலீட்டு வாய்ப்புக்களுக்காக வழங்கும் தேசிய வேலைத் திட்டத்திற்கான முன்னாயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள காணியற்ற மக்களுக்கு பளைப் பகுதியில் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை பகிர்ந்தளித்து அவர் களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு ஏற்பாடுகள் இருந்தால் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

இக் கலந்துரையாடலில் திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச சபையின் தவிசாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (5-4)

# வவுனியாவில் மரநடுகை ஆரம்பம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் அழிக்கப்பட்ட காடுகளை மீள் உருவாக்க 10 வருடங்கள் தேவை என வன்னி பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

நிலத்தடி நீரை பாதுகாக்கும் நோக்குடன் பத்து இலட்சம் மரக்கன்றுகளை நாட்டும் தேசிய வேலைத் திட்டம் நாடளாவிய ரீதியில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் றம்பைவெட்டி கிராமத்தில் குறித்த நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் மற்றும் அரச அதிபர் சமன் பந்துலசேன, பிரதேச செயலாளர் ந.கமலதாசன் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர்.

நிகழ்வில் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் உத்தியோகத்தர் சதீஸ்குமார், கிராம உத்தியோகத்தர் தர்சன், பொது அமைப்பினர், கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதேவேளை கிராம மக்களுக்கும் மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (5-4-299)

# தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை

## ஜனாதிபதிக்கு செல்வம் கடிதம்

(நெளுக்குளம்)

தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்படாமை தொடர்பாக வன்னி பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஜனாதிபதிக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வவுனியாவில் உள்ள திருநாவற்குளம், மகாரம்பைக்குளம், ஸ்ரீநகர், கற்குழி மற்றும் தேக்கவத்தை ஆகிய கிராமங்களில் கொவிட்-19 தொற்று காரணமாக பலர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

எனினும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசாங்கம் வழங்க வேண்டிய ரூபாய் 5 ஆயிரம் பெறுமதியான உலர் உணவுப்பொதிகள் இதுவரை அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

தற்போது இந்த மக்கள் மிகவும் கடினமான சூழ் நிலைக்கு ஆளாகி காணப்படுகிறார்கள்.

எனவே இவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய உலர் உணவுப் பொதிகளை வழங்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(5-4-299)

## இராசிபலன்

25.12.2020
மார்கழி 10, வெள்ளிக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 3.22 மணிவரை
அச்சுவினி முற்பகல் 9.36 மணிவரை
சுபநேரம் 6.26-7.56 மணிவரை
இராகுகாலம் 10.56-12.26 மணிவரை
சந்திராஷ்டமம்:- சித்திரை
சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் வளவன்


மேஷம்

வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், வேலைச்சுமை கூடும், நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள்.


ரிஷபம்

சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.


மிதுனம்

உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.


கடகம்

கண்ணியம்மிக்க ஒருவரின் சந்திப்பு இடம் பெறலாம், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள் உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.


சிம்மம்

உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை கூடும் நாள், சிக்கல்கள் விலகி சிறப்புக்கள் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி

மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், தொழிலில் அதிகாரிகளை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், தேகநலனில் கவனம் தேவை.


துலாம்

பிற இனத்தவரால் பெருமை சேரும் நாள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எடுத்த காரியம் எளிதில் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலமுண்டு, வழிபாட்டால் ஆர்வம் கூடும், ஆரோக்கியமான நாள்.


தனுசு

உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, செய்தொழில் ஆர்வம் காட்டுவீர்கள்.


மகரம்

பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வாகன சுகமுண்டு பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.


கும்பம்

உறவினர் உங்கள் முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டுவர், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.


மீனம்

பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

நன்மை செய்வதால் நட்டம் இல்லை.

# மக்கள் பொறுப்பற்று செயற்பட்டால் நிலைமை கைமீறிச் செல்லும்

## எச்சரிக்கும் சுகாதாரப் பிரிவுகள்

(கொழும்பு)

**பண்டிகைக்காலத்தில் பெருமளவில் மக்கள் களியாட்ட நிகழ்வுகளில் அல்லது விருந்துபசார நிகழ்வுகளில் கலந்து கொள்வதால் ஆபத்தான சூழ்நிலை ஏற்படலாம் என சுகாதார பிரிவுகள் எச்சரித்துள்ளன.**

சமூக விலக்கலை புறக்கணித்து கொரோனா வைரஸ் குறித்த விதிமுறைகளை புறக்கணித்து கிறிஸ்மஸ் புத்தாண்டு காலப் பகுதியில் விருந்துபசார நிகழ்வுகளையும் பெருமளவானவர்கள் ஒன்றுகூடும் நிகழ்வுகளையும் நடத்துவதற்கு தீர்மானிப்பதால் நாட்டில் கொரோனா வைரஸ் நிலவரம் ஆபத்தானதாக மாறலாம் என நுண்ணுயிரியல் ஆலோசகர் வைத்தியர் சிரானி சந்திரசிரி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

உலகம் கொரோனா வைரஸ் பரவலை எதிர்கொள்கின்றது. அதுமுடிவிற்கு வருவதற்கான அறிகுறிகள் தற்போதைக்கு தென்படவில்லை எனத் தெரிவித்துள்ள அவர் சுகாதார விதிமுறைகளை பின்பற்ற வேண்டியது மக்களின் கடமை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில் பொது மக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட்டால் கொரோனா வைரஸின் முதலாவது அலையை தோற்கடித்தது போல இரண்டாவது அலையையும் தோற்கடிக்க முடியும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

பொதுமக்கள் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொண்டால் கொரோனா வைரஸால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், புதிய வருடத்தில் நாடு மேலும் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். (ஜ-2)

# ஒருவரின் கை,கால்களை வெட்டி எடுத்துச் சென்றவர்களால் பரபரப்பு

(கொழும்பு)

வெயாங்கொட மாலிகா தென்ன பிரதேசத்தில் நபர் ஒருவரின் கை, கால்கள் வெட்டி கொண்டு சென்றமையால் பரபரப்பு நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த 19ஆம் திகதி இந்தச் சம்பவம் இடம்பெற்ற நிலையில், 20ஆம் திகதி சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் கால் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டதாக வெயாங்கொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேல் மாகாணத்திற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் வழங்கிய ஆலோசனைக்கமைய பேலியகொட மற்றும் கம்பஹா விசேட பொலிஸ் பிரிவினால் இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் கால் ஒன்றை அவதானித்த பிரதேச மக்கள் அதனைப் பொலிஸாரிடம் அறிவித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்ட கால் வத்துபிட்டவல வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கால் மற்றும் கைகள் வெட்டிய குற்றச்சாட்டிற்கு தொடர்புடைய சந்தேக நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (ஜ-2)

# விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதி அதிகரிப்பு



(கொழும்பு)

அடுத்த வருடம் முதல் விவசாய உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக சிறு - பெருந் தோட்டம் சார்ந்த உற்பத்தி மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்பர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் கரும்பு, சோளம், மரமுந்திரிகை, மிளகு, கறுவா, வெற்றிலை, உள்நாட்டு மா வகை, மரவள்ளி, சீத்தா உள்ளிட்ட உற்பத்திகளின் ஏற்றுமதி அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்காக, குறித்த பயிர்கள் உற்பத்தி செய்யப்படும் விவசாயக் காணியின் அளவை அதிகரிக்கவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# பல் கொடுத்தவர்களுக்கு பணப்பரிசு

(கண்டி)

கண்டி, கொழும்பு பிரதான வீதியின் கடுகன்னாவ ஹேனாவல சந்திக்கு அருகில் வெள்ளைக் கோட்டின் மீது பயணித்த சிறுமி ஒருவர் விபத்துக்குள்ளாகியுள்ளார்.

இதன்போது அவரது பல் ஒன்று உடைத்து விழுந்துள்ளது. அந்தப் பல்லை அவதானித்த கடுகன்னாவ பொலிஸ் அதிகாரிகள் இருவர் அதனை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அதனை உடனடியாகக் கொண்டு சென்ற பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கு பணப்பரிசு கிடைத்துள்ளது. போக்குவரத்து பொலிஸ் அதிகாரிகள் இருவருக்கே இந்த பணப்பரிசு கிடைத்துள்ளது. (ஜ-2)



**“வீடுகளில் அமைக்கும் கிறிஸ்மஸ் மரங்களும் குடிலும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையின் அடையாளங்களாக அமையட்டும்”**

2020ஆம் ஆண்டு கிறிஸ்து பிறப்பு விழாவை இன, மத, நிற, மொழி வேறுபாடின்றி உலகம் முழுவதிலும் கொண்டாடப்படும் வேளை உலக மக்கள் அனைவரும் கொரோனா தொற்று நோய் பற்றிய பயத்திலும் பதற்றத்திலும் நோய் காரணமாக ஏற்படும் தாக்கங்களுக்கும் உள்ளாகி உள்ளனர். முதலில் பாலக இயேசுவின் அன்பும் அருளும் ஆசீரும் இவ் விழாவை கொண்டாடும் அனைவரோடும் என்றும் இருப்பதாக என இறை ஆசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிக்கிறோம்.

எந்தக் கொள்ளை நோயாலும் கிறிஸ்து பிறப்பின் ஒளியையும் மகிழ்வையும் நம்பிக்கையையும் குறைத்து விடமுடியாது. இந்தக் கொள்ளை நோய் காரணமாக பல்வேறு துன்பங்களை அனுபவித்துவரும் வேளையிலும் வீடுகளில் அமைக்கும் கிறிஸ்மஸ் மரங்களும் குடிலும் கடவுள் நம்மோடு இருக்கிறார் என்ற நம்பிக்கையின் அடையாளங்களாக அமையட்டும். இந்த அடையாளங்களின் வெளி அர்த்தத்தையும் தாண்டிச் சென்று அவற்றின் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ள இறை அன்பையும் மகிழ்வையும் முழுவதுமாக புரிந்து கொண்டு இயன்றவரை பகிர்ந்து கொள்ளுங்கள்.

கிறிஸ்து பிறப்பின் விழா என்றும் எந்த நிலையிலும் ஒரு மகிழ்வின் விழா. நம்பிக்கையின் விழா. இந்த விழாவை இவ்வாண்டு கொரோனா சுகாதார விதிமுறைகளையும் சமூக இடைவெளியையும் பேணி குடும்ப வட்டத்தில் அமைதியாகக் கொண்டாடுங்கள்.

பாலக இயேசுவின் பிறப்பு உலக மக்கள் அனைவரையும் கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாத்து இந்த தொற்று நோய் உலகில் இருந்து முற்றாக அகல வேண்டுமென பிரார்த்தியுங்கள். செபத்தால் மட்டுமே இந்தத் தொற்று நோயை நீக்க முடியும் என நம்பி மத, பேதமின்றி இறை வேண்டுதல் செய்யுங்கள்.

உலகம் முழுவதிலும் நோயால் பாதிக்கப்பட்டோர் மன அமைதி பெறுவார்களாக. இறந்தவர்கள் நித்திய அமைதியைப் பெறுவார்களாக.

கொரோனாத் தொற்று முடிந்து விடவில்லை. எமது பகுதிகளில் இப்போது தான் அதிகரிக்கிறது. எனவே மிகுந்த கவனத்துடன் செயற்படுங்கள்.

தொற்று நோய், மழை வெள்ளம் போன்ற இக்கட்டான வேளையில் உங்களால் இயன்றவரை இயலாமையிலும் தேவையிலும் இருப்போருக்கு அன்புக்கரம் நீட்டுங்கள்.

இந்தப் பெருவிழாவின் போது உலகம் முழுவதிலும் பல்வேறு மொழிகளிலும் பாடப்படும் ஒரே இறைவார்த்தை உன்னதத்தில் கடவுளுக்கு மாட்சி உரித்தாகுக. உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்பதாகும் (லூக்காஸ் 2:13-14).

இந்தப் பெருவிழாக் காலத்தில் அவருக்கு உகந்தவர்களாகி எல்லோரிற்கும் அமைதியையும் அன்பையும் உண்டாக்கும் கருவிகளாகவே நாம் அழைக்கப்படுகிறோம்.

உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகுக என்ற வார்த்தைகளை எமதாக்கி வாழ அழைப்பு விடுத்து இறையாசீருடன் கிறிஸ்மஸ் புதுவருட வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம்.

இவ்வாண்டு உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்களால் இலங்கையிலும் கொரோனாத் தொற்றால் உலகம் முழுவதிலும் பெரும் துயரம் ஏற்பட்டுள்ளது. புதிய ஆண்டு இறை அன்பும் அருளும் ஆசீரும் நிறைந்த ஆண்டாக இறையாசீர் வேண்டுகிறோம்.

**கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை, யாழ் ஆயர்**

## நம்பிக்கையின் ஒளியாக மாறுவோம்

இருள் சூழ்ந்த உலகில் ஒளி தேடும் மானுடம்
இறைவார்த்தை சொன்னது எம் வாழ்வில் சுவைத்திட
உங்களுக்கோர் நற்செய்தி தரப்பட்டது

“அஞ்சாதீர்! இதோ எல்லா மக்களுக்கும்
பெரு மகிழ்ச்சியூட்டும் நற்செய்தியை
உங்களுக்கு அறிவிக்கின்றேன்
இன்று ஆண்டவராகிய மெசியா
என்னும் மீட்பர் உங்களுக்காக
தாவீதின் ஊரில் பிறந்திருக்கிறார்.”

என்ற வார்த்தை நம்பிக்கை ஒளியாக பிறந்தது
இடையர்கள் அறிய விரைந்தனர் அங்கே
சென்றனர் கண்டனர் மக்களிடம் பகிர்ந்தனர்
இதுவே இன்றுவரை பகிரப்படும் நற்செய்தியாக
நத்தார் விழாக்கள் நாடெங்கும்
ஒளிவிழாவாக நம்பிக்கை விழாவாக
இனம், மதம், மொழி கடந்து
பல வடிவங்களால் நம்பிக்கை ஒளி ஏற்றும்
விழாவாக மகிழ்வூட்டப்படுகின்றது

வடிவங்கள் பல மாறலாம், நிகழ்வுகள்
பிறர் வாழ்வுக்கு நம்பிக்கை ஒளியாக
பிரகாசிக்கும் செயல்களாக
இன்றைய பால இயேசுவின் பிறப்புக்கள்
இறை சாயலில் வாழும் சின்னஞ் சிறுசுகளை
எம் முன்னே காணும் போது அவர்களில்
நம்பிக்கை ஒளி வாழ்வாக மலர வேண்டும்

சத்திரத்திலும் இடமில்லாதவர்
சரித்திரத்தில் பதிவாக வாழும்
பால இயேசுக்களை பாதுகாக்க
மகிழ்வூட்டி மகிழும் இருளகற்றி
ஒளியை ஏற்றும் மானிடமாக அர்த்தமுடன்
இருளகற்றும் ஒளியாவோம்.

**செ.யோசப்பாலா**
**செயலாளர், கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்.**

# தேடலில் மையங்கொண்டு தேவரீரைத் தேடுவோம்



மனித வாழ்க்கைக்கு வளம்சேர்ப்பதே தேடல்தான் எனலாம். இத்தேடல் இலட்சியப்பாதையில் மனிதனுக்கு மனிதன் மாறுபடுகின்றது. இன்று வாழ்வில் மனிதன் தேடல்களை அதிகரித்துக் கொண்டே செல்கின்றான். தன்னைத் தேடியவர்களைத் தேற்ற இறைவன் வந்தார் என்பதை ஆணித்தரமாக உணர்த்தும் ஓர் அற்புத விழாவே கிறிஸ்மஸ். ஏழைகள், பசியுற்றோர், தேவையில் இருப்போர், இவர்களாலேயே கிறிஸ்து பிறப்பு விழாவில் பொருள் காணமுடியும். அவர்களைத் தேடியே “கடவுள் நம்மோடு” என்ற பெயர் தாங்கிய இறைவன் வருவார்.” மனித குலத்தின் ஏக்கப்பெரு மூச்சின் இறுதி வெளிப்பாடே கிறிஸ்மஸ் பெருவிழா எனலாம். வரலாற்றில் நடத்து ஒரு நிகழ்வு வரலாற்றையே மாற்றியமைத்தது என்றால் அது கிறிஸ்து பிறப்பு மட்டுமே.

### தேடல்கள் பல விதம்

கவிஞனின் தேடல் கற்பனை. கலைஞனின் தேடல் அழகு. பக்தனின் தேடல் பரம்பொருள். பரம்பொருளின் தேடல் பக்தியுள்ள மனிதன். எனவே பல்வேறு காரணங்களுக்காக பலவிதமான தேடல்கள் புதைந்து கிடக்கின்றன.

### இயேசு பிறப்பும் உடனடித் தேடலும்

இரண்டு வித்தியாசமான தேடல்கள் இயேசு பிறந்தவுடன் அவரில் மையப்படுத்தப்படுகின்றன. பிறந்த இயேசு பாலனைத் தேடி ஞானிகள் ஒருபுறம், அரசன் ஏரோது மறுபுறம். ஆனால் இவர்களின் தேடலின் நோக்கம் இருவேறு முரண்பட்ட காரணங்களாக இருந்தன.

### ஞானிகளின் தேடல்

உண்மையானவரை உண்மையாகவே தேடுகின்றார்கள் ஞானிகள். ஞானிகள் உலகை மீட்க, பாரெங்கும் நல்லமைதியை அருள, நாயகன் பிறந்துள்ளார் என அவரைத் தேடுகின்றனர். அவரை வணங்கி அவரிடம் ஆசீர் பெற அவரைத் தேடினார்கள். உண்மையாகவே அவர்களின் உள்ளம் உலக மீட்பரைத் தேடும் உள்ளம் என்பதால் இறைவார்த்தை அதிசய வீண்மீனாக அவர்களின் தேடலுக்குப் பாதை காட்டியது. ஆநிரைத் தொழுவில் அகிலத்திற்கும் அமைதி அருள்பவரைக் கண்டு நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கினர். சுயநலமற்ற தேடல் அவர்களில் சுத்தமாக இருந்ததால் தேடிய தேவனை கண்டனர். வேண்டிய அமைதியை அவரில் பெற்றனர். மன்றாடிய ஆசீரும் மனமகிழக் கிடைத்தது.

### ஏரோதின் தேடல்

எனது அரசிற்கு போட்டியாக ஓர் அரசனா? உலகில் அவனை வாழவிடுவதா? அவனைக் கொல்ல வேண்டும். கங்கணம்கொண்ட ஏரோது இயேசுவை நகரெங்கும் தேடப் புறப்படுகின்றான். கொடுமையாகச் செயற்படும் அரசன் அவன். தனது குடும்ப நபர்களையும், இராபிகளையும் கொன்று குவித்தவன். அராஜகத்தோடு அரசைக் கைப்பற்றியவன். சகோதரனின் மனைவியை தனதாக்கியவன். மெசியா வருகையைப் பற்றிக் கேள்வியுற்று அஞ்சுகிறான். நடுங்குகிறான். குழப்பம் அடைகின்றான். அவன் ஒரு பொய்யன். இயேசுவைக் கண்டபின் என்னிடம் வாருங்கள், நானும் அவரைக் கண்டு ஆராதிப்பேன் என்று ஞானிகளிடம் பொய் சொல்லுகின்றான். இயேசுவின் வருகை இவனது அரசுக்கு அச்சுறுத்தும் செயலாக இருக்கும் என்ற அச்சம் இவனைக் கவ்வியது. வள்ளல் தேவனைக்கண்டு வணங்கி அகில மீட்பரில் ஆசிர் பெறவென பொய்ப் போர்வையில் உண்மையானவரைத் தேடுகின்றான். ஏரோதின் தேடலில் ஏமாற்றும் எண்ணம் இருந்தது. ஏற்றுக் கொள்ளும் உள்ளம் இருக்கவில்லை. பொய்மை இருந்தது. உண்மை இருக்கவில்லை. அநீதி இருந்தது நீதி இருக்கவில்லை. பழிவாங்கும் எண்ணம் இருந்தது. பரிவுபசாரம் இருக்கவில்லை. வஞ்சகம் இருந்தது. நேர்மை இருக்கவில்லை. இதனால் நேச இயேசுவை அவனால் கண்டுகொள்ள முடியவில்லை. ஆகவே இரண்டு வயதுக்கு உட்பட்ட ஆண் குழந்தைகளை வெட்டிக் கொன்றான். இருந்தும் தேடிய இயேசுவை கண்டு அழிக்க முடியவில்லை. அவனது தேடலில் சுயநலம் சுற்றிப்போயிருந்தது. தேவனுக்கு அவன் தேடல் உகந்ததாக இருக்கவில்லை. இவ்வாறு எமது இன்றைய தேடல்களும் சுயநலத் தேடல்களாக அதிகரிக்கின்றன.

### இறைவனின் தேடல்

எகிப்தில் என்மக்கள் படும் துன்பத்தை என் கண்களால் கண்டேன். அடிமை வேலைவாங்கும் அதிகாரிகளை முன்னிட்டு அவர்கள் எழுப்பும் குரலைக் கேட்டேன். அவர்களின் துயரங்களை நான் அறிவேன். எகிப்தியரின் பிடியிலிருந்து அவர்களை விடுவிக்கவும் அந்நாட்டிலிருந்து பாலும், தேனும் பொழியும் நல்லதோர் நாட்டிற்கு அவர்களை நடத்திச் செல்லவும் இறங்கி வந்துள்ளேன் என்கிறார் இறைவர்.

இறைவன் தனது இருக்கையில் இருந்து கற்பிக்கின்ற வேதம் மனிதனின் இதயத்துக்குள்நுழைய மறுத்தபோது இறைவனே இறங்கி வந்து வேதமானார்.

### எமது தேடல்

கற்பனைகளில் கோட்டைகட்டாமல் யதார்த்தங்களில் குடிசை கட்டவே இயேசு மாட்டுக்குடிலில் பிறந்தார். கிறிஸ்து பிறப்புவிழாக் கொண்டாட்டங்கள், இறையன்பு மற்றும் பிறரன்பிற்கான அழைப்பிற்கு செவிமடுப்பதன் வெளிப்பாடாக இருக்கவேண்டும். கிறிஸ்மஸ் விழா சுயநலத்தை களைந்து பிறர் நலத்தை நமதாக்கி கொள்ள வானில் நின்று வந்த விழா.

நாம் நம்முடைய வாழ்க்கையில் சுயநலத்தை வெறுப்போம். சுத்த கருத்துடன் தேவனைத் தேடுவோம். இனியும் வேண்டாம் ஏரோதின் தேடல்கள். ஏற்போம் ஞானிகளின் தேடலை. நடமாடும் உலகோடு நடமாடி சறுக்கான பாதைவழியே தடம் மாறிச் செல்வோருக்குச் சரியான வழிகாட்டுவோம். தூணாக இயேசுவை துணையாகக் கொண்டு தேனாக பிறர் வாழ தானாக செல்வோம். பாதிவழியில் காற்றும் புயலும் கலந்தே வீசிடினும், அச்சமும் கலக்கமும் அசைத்திடினும் ஆபத்து வேளையில் கண்திறந்து பார்ப்பார். இயேசு கடிந்து கட்டளையிடுவார். கண்ணிமைக்கும் பொழுதில் காற்றும் புயலும் அவர் ஆணையை ஏற்று அமைதி கொள்ளும். துன்பங்களும் துயரங்களும் வாழ்க்கையின் கொந்தளிப்புக்களும் சண்டைகளும் சச்சரவுகளும் சாய்க்க வரும் சூறாவளிகளும், சுற்றி வீசும் சுழற்காற்றுக்களும் சிதறியே போகும். ஆதவனைக் கண்ட பனிபோல் அல்லல்கள் அனைத்தும் அகன்றே போகும்.

**ம.பிரான்சிஸ்க்**
**ஆசிரியர் தொடர்பாலும் ஊடகக்கற்றையும்**
**யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை**

# அனைத்துத் துறைகளிலும் தன்னிறைவு பெறும் வேலைத்திட்டத்தை செயற்படுத்த வேண்டும்

(கொழும்பு)

**'எமது நாடு' குறித்த எதிர்பார்ப்புகளை கொண்டிருக்க வேண்டுமாயின் அனைத்துத் துறைகளிலும் நாட்டை தன்னிறைவடையச் செய்யும் வேலைத்திட்டமொன்றை செயற்படுத்த வேண்டும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



'புதிய நாட்டிற்கு புதிய ஔடதம்' எனும் எண்ணக் கருவிற்கமைய அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தினால் புதிதாக உற்பத்தி ஆரம்பிக்கப்பட்ட ஃப்ளுகோஷைலின் ஔடத மாத்திரையைப் பிரதமரிடம் வழங்கி, அறிமுகப்படுத்தும் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இதன் போது உரையாற்றிய பிரதமர், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வதைக் குறைத்தல் மற்றும் நிறுத்துவதுடன் நம் நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்தும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியுடன் காணப்படுவதாக தெரிவித்தார்.

"விசேடமாக 2012ஆம் ஆண்டிலேயே இத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு எமக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அன்று 4470 மில்லியன் இதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. அதனால் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் திறன் இரட்டிப்பாகியுள்ளது.

அதனால் இந்நிறுவனத்தின் முக்கியத்துவம் குறித்து நான் புதிதாக எதையும் கூறத் தேவையில்லை.

எனினும், நாம் 70 வீதமான ஔடதங்களை இந்தியா, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கின்றோம்.

நாம் அவ்வாறு இறக்குமதி செய்கின்றோமாயின், அந்த ஔடதங்களை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான பொறுப்பு எமக்குள்ளது.

அதனை செய்வதற்கான ஞானம் மற்றும் அறிவு மிகுந்தவர்கள் எம்மிடம் உள்ளனர்.

இந்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய அனைத்தும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட வேண்டும் என்றும், வெளிநாட்டு இறக்குமதியை குறைக்க வேண்டும் என்பதிலும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் உறுதியாக உள்ளது. அதனால் அதற்கான வேலைத்திட்டங்களை நாம் அனைத்து துறைகளிலும் செயற்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-2)

## ஹல்துமுல்ல பிரதேச சபையின் தவிசாளராக தமிழர் நியமனம்

(பதுளை)

ஹல்துமுல்ல பிரதேச சபையின் தவிசாளராக சிங்கமுத்து அசோக்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம்.முஸம்மில் மற்றும் பெருந்தோட்டங்களுக்கான பிரதமரின் ஒருங்கிணைப்புச் செயலாளரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான செந்தில் தொண்டமான் முன்னிலையில், நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (ஜ-4)



# கற்றலில் கவனம் (Attention in Learning)


நேற்றைய தொடர்ச்சி...:

**g)மாற்றம் (Change)**

மாற்றம் எமது கவனத்தை இலகுவாக கவர்கின்றது. உதாரணமாக ஒரு தொடர்ச்சியான சத்தத்தின் நடுவே ஒரு கணப்பொழுது ஏற்படுத்தப்படுகின்ற ஆழமான அமைதி.

ஆசிரியர்கள் கற்பித்தல் உபகரணங்களைப் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான இடத்தில் பயன்படுத்துதல், தமது குரலை பொருத்தமான இடங்களில் உரிய ஏற்றத் தாழ்வுகளுடன் பயன்படுத்துதல்.

**h)புதுமைப்பாடு (Novelty)**



புதியவை அல்லது பரீட்சயமற்றவையின்பால் கவனம் துரிதமாக செலுத்தப்படும். வழமையான ஆசிரியருடன் ஒப்பிடும் போது வகுப்பினுள் நுழையும் புதிய ஆசிரியருக்கு மாணவர்களிடம் கிடைக்கும் வரவேற்பு அதிகமாகும்.

ஆசிரியர்கள் தமது கற்பித்தலில் புதுமையைப் புகுத்துதல் (**Smart board** பயன்பாடு). பயன்படுத்தும் கற்பித்தல் உபகரணங்களில் புதுமை தன்மையைக் கையாளல் (வடிவம், காட்சிப்படுத்தும் விதம், புதியது என்பன) மாணவர்களின் இடைவினைப்பாட்டில் புதிய உத்திகளை கையாளல் (தனி, சோடி, குழு என்றவாறு) போன்றன

**i)தெளிவற்ற தன்மை/ சந்தேகமான விடயமும் நம்பமுடியாத் தன்மையும். (Ambiguity and incongruity)**

தூண்டிகள் தெளிவான கருத்தை அல்லது விளக்கத்தை அல்லது கட்டமைப்பை வழங்காத போது அதன்பால் எமது கவனம் கவரப்படும்

உதாரணமாக ஆசிரியர் ஒருவர் ஒருகுறிப்பிட்ட படவரைபடத்தை பிள்ளைகளிடம் காண்பித்து அதில் காணப்படும் நகரங்களை குறிக்கும்படி கேட்கின்றார்.

ஆனால் அந்த வரைபடத்தில் நகரங்கள் பற்றிய தகவல்களை தவிர மற்றைய எல்லா பூகோள ரீதியான தகவல்களும் போதுமான அளவில் வழங்கப்பட்டுள்ளன.

எனவே குறித்த விடயம் தொடர்பாக போதுமான தகவல்கள் காணப்படாமை மாணவர்களிடத்தே தெளிவற்ற தன்மையை ஏற்படுத்துகின்றது. இது அவர்களுடைய கவனிப்புத்தன்மையைக் கூட்டுகின்றது.

நம்பமுடியாத்தன்மையும் கவனத்தை ஈர்க்கும் ஒரு விடயமாகும். உதாரணமாக செட்டைகளுடன் கூடிய மீனினை யாராவது காட்டினால் அது எமது கவனத்தைக் கவரும்.

ஆசிரியர்கள் பூரணப்படுத்தப்படாத படத்தின் மாதிரிகளை மாணவர்களுக்கு வழங்கி தேவையான பொருத்தமான சில அறிவுறுத்தல்களை வழங்குவதன் மூலம் அவற்றினை நிறைவு செய்யக் கேட்கலாம். நம்ப முடியாத விடயங்களூடாக நம்பத் தகுந்த விடயங்களை வழங்கல்.

**j) மனவெழுச்சி சார் தூண்டிகள் : (Emotional stimuli)**

நாம் வாசிக்கும் புத்தகங்கள் கொல் (**Kill**), எரி (**Burn**), குண்டு (**Bomb**) போன்ற மனவெழுச்சிசார் சொற்களை கொண்டிருக்குமாயின் அவற்றின் மீதான எமது நாட்டம் அல்லது விருப்பு உயர்வாக காணப்படும்.

எனவே அவற்றினை சாதாரண சொற்களை கொண்டிருக்கும் புத்தங்களை விட விரைவாக வாசிக்கின்றோம். ஆசிரியர் பொதுவான ஒரு காட்சிப்படுத்தலில் மாணவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக இவ்வாறான உருவங்களையும் போன்ற சொற்களையும் இடையிடையே பயன்படுத்துதல்.

**2)விடயி சார்ந்த காரணிகள் / அகவயமான காரணிகள் (Internal factors)**

உள்ளார்ந்த காரணிகள் எனப்படுபவை தனிப்பட்ட நபர் சார்ந்தவை. எனவே இவற்றை அகவயமான காரணிகள் எனவும் அழைப்பர்.

**ஆர்வம்: (Interest)**

எல்லா மனிதர்களும் ஒரு விடயத்தில் ஒரே மாதிரியான விருப்பையும் வெறுப்பையும் காட்டுவதில்லை இது தனியாட்களுக்கேற்ப வேறுபடும். ஒருவிடயத்தின் பால் ஒருவருக்கு இருக்கும் ஆர்வத்தின் அல்லது விருப்பத்தின் அளவைப் போல் மற்றவரிடம் இருக்கும் எனக் கூறமுடியாது. எனவே ஒரு தனியாளிடம் காணப்படும் ஆர்வம் அவனுடைய கவனத்தில் தாக்கம் செலுத்தும்.

உதாரணமாக ஒரே பாதையில் பயணம் செய்யும் ஒரு எந்திரியையும் (**Engineer**). ஒரு தாவரவியலாளரையும் (**Botanist**) எடுத்துக் கொண்டால் அவர்கள் இருவருடைய கவனமும் வேறுபட்டதாகவே அமையும்.எந்திரி கட்டடங்கள் மீது கவனத்தையும் தாவரவியலாளர் மரங்கள் மீது கவனத்தையும் செலுத்தியவர்களாக காணப்படுவர். இதற்கு காரணம் அவர்களுடைய தனிப்பட்ட ஆர்வமேயாகும்.

**விருப்பம் / ஆசை (Desire)**

தனிமனிதனுடைய விருப்பம் / ஆசை ஒரு விடயத்தின் மீதான அவருடைய கவனத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

உதாரணமாக ஒருவர் ஒரு சுத்தியலை வாங்க வேண்டும் என ஆசைப்பட்டால் சந்தையில் பல்வேறு பொருட்கள் கிடைக்கக்கூடியதாக இருந்தாலும் அவருடைய கவனம் சுத்தியல் இருக்கும் பக்கமே ஈர்க்கப்படும்.

**ஊக்கல் (Motives)**

ஒரு மனிதனின் அடிப்படையான உள்ளார்ந்த ஊக்கல் அவனுடைய கவனத்தை ஈர்க்கும் மிக முக்கியமான உள்ளார்ந்த காரணியாகும். மனிதனின் அடிப்படை தேவைகளான பசி, தாகம், பாலியல் தேவைகள், பாதுகாப்பு என்பன குறிப்பிடத்தக்க பங்களிப்பை கவனத்தின்பால் காட்டுகின்றன.

உதாரணமாக தாகமாக இருக்கும் மனிதனின் கவனம் தண்ணீர் கிடைக்கும் இடங்களின் பால் மிக விரைவாக ஈர்க்கப்படுகின்றது.

**நோக்கம் / குறிக்கோள் (Aim/ Objective)**

ஒவ்வொரு மனிதனும் தமது வாழ்க்கையில் உடனடியான நோக்கங்கள் அல்லது குறிக்கோள்கள் சிலவற்றையும் நீண்டநாள் குறிக்கோளையும் கொண்டிருப்பார்கள்.உதாரணமாக ஒரு மாணவன் தன்னுடைய உடனடியான நோக்கமாக பரீட்சையில் சித்தியடைதலைக் கொண்டிருப்பானானால் அவனுடைய இறுதி நோக்கு அல்லது குறிக்கோள் மருத்துவராக வருதலாக இருக்கும் எனலாம்.

இவ்வாறான மாணவர்களின் கவனமெல்லாம் படிப்பின் மீதும் பாடப்புத்தங்களின் மீதுமாக இருக்கும். மறுதலையாக இவ்வாறான நோக்கம் சிறிதளவேனும் இல்லாதவர்களின் கவனம் பாடத்தின் மீது செல்லாது.

**பழக்கங்கள் (Habits)**

பழக்கமும் கவனத்தை ஈர்க்கும் விடயத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒருவர் துடுப்பாட்ட விளையாட்டினை விளையாடுவதை தனது பழக்கமாகக் கொண்டிருப்பாரானால் அவர் துடுப்பாட்ட வர்ணனையை கேட்பதில் மிகுந்த விருப்பு உடையவராகவும் அதனை மிகுந்த கவனத்துடனும் கேட்பார்.

**கடந்த கால அனுபவங்கள்: (Past Experiences)**

கடந்த கால அனுபவங்கள் எமது கவனத்தை ஈர்ப்பதில் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. உதாரணமாக ஒருவர் எமக்கு மிகுந்த விசுவாசம் உள்ளவர் என்பதனை நாம் கடந்த கால அனுபவங்களின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டிருந்தால் அவர் கூறும் சாதாரண ஆலோசனைகளைக் கூட நாம் மிகுந்த கவனத்துடன் செவிமடுப்போம்.

மாறாக எமது நம்பிக்கைக்கு உரியவர் அல்லாத எவரும் கூறும் மிக முக்கியமான ஆலோசனைகளைக் கூட நாம் கருத்தில் கொள்ளமாட்டோம்.

இவை தவிர ஒருவருடைய மனப்பாங்கு (**attitude**), உளஅமைப்பு (**Mental set**), அவருடைய நிலையும் குணாதிசயங்களும் கவனத்தில் செல்வாக்குச் செலுத்தும் உள்ளார்ந்த காரணிகளாக அமைகின்றன.

கற்போனுக்காகவே கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள்.எனவே கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டின் போது கவனத்தில் செல்வாக்குச் செலுத்தும் விடயி தொடர்பான விடயங்களில் மிகக்கூடிய அக்கறை செலுத்துதல் முக்கியமானதாகும்.

மாணவர்களின் ஆர்வம், அவர்களுடைய தேவைகள், விருப்பங்கள், தயார்நிலை / ஆயத்த நிலை, அவர்களின் மனநிலை, உடல்நிலை என்பன தொடர்பாக அறிந்து கொண்டு ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்வது புறக்காரணிகளின் ஒழுங்கான திட்டமிடலை விடவும் மிக முக்கியமான விடயமாகும்.

**முடிவுரை**

மாணவர்கள் ஒவ்வொருவரும் தனித்தன்மை உள்ளவர்கள். அவர்களிடம் தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன. எனினும் ஒரு வகுப்பறையில் ஒன்றாக சேர்ந்து பயணிக்கும் மாணவர்கள் பெரும்பாலான விடயங்களில் ஒத்துக் காணப்படுவர்.

அவர்களுக்காக வடிவமைக்கப்பட்ட கலைத்திட்டமும் பொதுவானது. எனவே அவர்கள் எல்லோருடைய கவனத்தையும் கற்றல் கற்பித்தற் செயற்பாட்டின் போது அதனை நோக்கி ஈர்ப்பதற்கான உத்திகளைத் தெரிந்து கொள்வதோடு அதனை ஆசிரியர்கள் வினைத்திறனான முறையில் கையாளவும் வேண்டும்.

இது சாத்தியமாக வேண்டும் என்றால் கலைத்திட்டத்தின் ஆணிவேரான ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தமது மனப்பாங்கில் உயர்ந்த அளவிலான மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும்.

ஆசிரியர் தொழிலில் இருந்து கொண்டு நாம் பெறும் பட்டங்கள் மற்றும் வாண்மை விருத்திச் செயற்பாடுகள் எல்லாம் வகுப்பறை செயற்பாட்டினை பயனுள்ள முறையில் அமைத்துக் கொள்வதற்கேயென சிந்திப்போமேயானால் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டில் மட்டுமல்ல அவர்களுடைய வாழ்க்கையிலும் கவனம் தொடர்பான எண்ணக்கருவை மிக இலகுவாக பதிந்து விட முடியும் என்பது கட்டுரையாளனின் அனுபவரீதியான பதிவாகும்.

திருமதி.சுமதி ஸ்ரீசுந்தரராஜா
விரிவுரையாளர்,
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. கோப்பாய்.

# மாணவர்கள் அனைவரும் வகுப்பேற்றப்படுவர்

## கல்வி அமைச்சு அறிவிப்பு

**(கொழும்பு) 2020 ஆம் ஆண்டின் மூன்றாம் தவணைக் காலம் நேற்று முன்தினத்துடன் நிறைவடைந்த நிலையில், அனைத்து மாணவர்களும் அடுத்த வகுப்பிற்கு உயர்த்தப்படுவார்கள் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**



இந்த ஆண்டு நிறைவடையும்போது, அனைத்து மாணவர்களும் அடுத்த வகுப்பிற்கு வகுப்பேற்றப்பட வேண்டும் என்றும் கல்வி அமைச்சு அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளது.

இதன்படி 2021 ஆம் ஆண்டு முதலாம் தவணையின்போது மாணவர்கள் வகுப்பேற்றப்பட்ட வகுப்பில் கல்வி கற்க வேண்டும் என்றும் கல்வி அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கு அமைவாக பாடப்புத்தகங்களை இந்த ஆண்டு முடிவடைவதற்குள் அனைத்து மாணவர்களுக்கும் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அனைத்து மாகாணங்களின் பிரதான செயலாளர்களுக்கும் மாகாண கல்வி செயலாளர்களுக்கும் மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் வலயக்கல்வி பணிப்பாளர்களுக்கும் அதிபர்களுக்கும் கல்வி அமைச்சினால் இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2021 ஆம் ஆண்டு ஜனவரி 11 ஆம் திகதி முதல் கல்வி நடவடிக்கைகளுக்காக பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-2)

# சில பகுதிகள் விடுவிப்பு

(கொழும்பு)

வெல்லம்பிட்டி 'லக்சந்த செவன' குடியிருப்பு தொகுதி நேற்று வியாழக்கிழமை காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

கொரோனா அச்சம் காரணமாக இரண்டு மாதங்களுக்கும் அதிக காலம் முடக்கப்பட்டிருந்த லக்சந்த செவன குடியிருப்பில் வாழும் மக்கள் தமது பிரதேசத்தை விரைவில் விடுவிக்குமாறு கோரி நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த நிலையிலேயே இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வாவினால் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. (ஜ-2)

# ஐ.நாவின் அறிக்கை அரசாங்கத்திடம் கையளிப்பு?



(கொழும்பு)

ஜெனிவாவில் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தில் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் இலங்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்படவிருக்கும் விரிவான அறிக்கை இலங்கை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

அதற்கான இலங்கை அரசின் பதில் அடுத்த வாரமளவில் ஜெனிவாவுக்கு வழங்கப்படுவதற்காக கொழும்பில் உள்ள ஐ.நா. அலுவலகத்தில் கையளிக்கப்படவுள்ளது.

கொழும்பில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தூதரகத்தின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ஹனாசிங்கர் இந்த விடயம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரனிடம் தெரிவித்துள்ளார்.

வழமையாக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சம்பந்தப்பட்ட அமர்வு நெருங்கும் சமயத்திலேயே அங்கு ஒரு நாடு தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் அல்லது அறிக்கையாளரினால் முன்வைக்கப்படவிருக்கும் அறிக்கை சம்பந்தப்பட்ட நாட்டுக்கு வழங்கப்படும்.

ஆனால், இலங்கை விடயத்தில் இம்முறை சுமார் பத்து வார காலத்துக்கு முன்னரே அரசாங்கத்துக்கு குறித்த அறிக்கை கையளிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வங்கியில் வசதிகள்

ஒரு திருடன் அவனுடைய மனைவியிடம் என்னங்க குடும்பச் செலவுக்கு பணம் கேட்டேனே என்ன ஆச்சு என்னு கேட்டாளாம்.

உடனே அவன், கொஞ்சம் பொறு வங்கி எல்லாம் பூட்டட்டும்... எடுத்துக் கொண்டு வந்து தருகின்றேன் என்றானாம். இது எப்படி இருக்குப் பாருங்கள். எல்லோரும் வங்கி திறக்கட்டும் பணம் எடுத்துக் கொண்டு வருகின்றேன் என்பார்கள். இவன் வங்கி மூடட்டும் பணம் எடுத்துக் கொண்டு வருகின்றேன். என்கிறான். எப்படி இருக்கு காலம். வங்கி திறக்கவில்லை என்றால் கூட, பணம் எடுக்கின்ற வசதி இப்பொழுது பல இடங்களில் வந்தாகிவிட்டது.

1967 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 26 ஆம் திகதி பிரிட்டனில் ஒரு அதிசயம் நடந்தது. அது எப்படி என்றால் ஒரு வங்கியிற்கு உள்ளே போகாமல் வெளியில் உள்ள சுவர் துவாரம் வழியாகவே எங்கள் கணக்கிலே இருக்கின்ற பணத்தை எடுக்கலாம் என்று அன்றைக்குத் தான் முதல் தடவையாக நிருபித்துக் காட்டினார்கள். லண்டனின் புறநகர்ப் பகுதியில் இப்படி ஒரு கருவியை நிறுவினார்கள். இப்பொழுதெல்லாம் அமெரிக்காவிற்கோ–பிரிட்டனுக்கோ போகிறவர்கள் தெருவுக்குத் தெரு இது மாதிரி கருவிகளைப் பார்க்கலாம். அமெரிக்காவிலேயும் ஐரோப்பாவிலும் வங்கியில் கணக்கு வைத்திருக்கின்ற ஒவ்வொருத்தருக்கும் ஒரு சின்ன பிளாஸ்ரிக் கார்ட் கொடுத்து விடுவார்கள். அதோடு ஒரு இரகசிய நம்பரும் கொடுத்து விடுவார்கள். அந்த நம்பர் கார்டிலே இருக்காது. நாம் தான் மனப்பாடம் செய்து மனதிலே ஞாபகத்திலே வைத்துக் கொள்ள வேண்டும்.

இப்பொழுது பணம் எடுக்க வேண்டுமா? வங்கி உள்ளே நுழைந்து செக்– கொடுத்து, டோக்கன் வாங்கி வரிசையிலே நிற்க வேண்டிய அவசியம் இல்லை. வங்கி வாசலில் அல்லது தெருக்களிலேயோ இருக்கின்ற ஏதாவது ஒரு பணம் வழங்கும் கருவியின் முன்னால் போய் நிற்க வேண்டியது. சுவர்களிலே அதைப் பொருத்தி வைத்திருப்பார்கள். எங்களிடம் இருக்கின்ற கார்டை, அந்தக் கருவியிலே சொருகி நாம் மனப்பாடம் செய்து வைத்திருக்கின்ற இரகசிய நம்பரை அழுத்த வேண்டும். டைப்ரைட்டர், கல்குலேட்டர்களிலே செய்கின்றோமே அது மாதிரி.

உடனே அந்தக் கருவியின் திரையில் பல கேள்விகள் ஒவ்வொன்றாக வரும். உங்களுக்குப் பணம் வேண்டுமா? உங்கள் கணக்கிலே இருக்கின்ற மீதித் தொகையை மட்டும் தெரிந்து கொள்ள வேண்டுமா? உங்கள் கணக்கிலே இருந்து இதுவரைக்கும் யார் யாருக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கு என்கின்ற அறிக்கை (Statement) வேண்டுமா?

பணம் வேண்டும் என்றால் எவ்வளவு வேண்டும்? 10, 20, 30, 40, 100, 200? இதை எடுத்ததுக்கான பற்றுச்சீட்டு வேண்டுமா? அல்லது பணம் மட்டும் வேண்டுமா? இப்படி பல வகையான கேள்விகள் உண்டு. பணம் மட்டும் வேண்டும் என்பவர்கள் நேரடியாக அதற்குரிய பட்டனை அழுத்தினால் ஒரு நிமிடத்துக்குள்ளே கேட்ட தொகை வந்துவிடும். எங்கள் கார்டும் திரும்பி வந்துவிடும். பணம் வழங்குகின்ற இந்தக் கருவிக்குப் பேர் தானியங்கி முறையில் பணம் வழங்கும் கருவி (Atm Card). இதிலே என்ன வசதி என்றால் வங்கி மூடிவிடுவார்கள் என்கின்ற அவசரம் வேண்டாம். இன்றைக்கு லீவு நாளாகிவிட்டதே வங்கி திறக்குமா? என்று கேட்டுக் கொண்டிருக்க வேண்டாம்.

வருடம் 365 நாளும் எந்த நேரமும் பணம் எடுக்கலாம். நாட்டின் ஒரு கோடியிலேயிருந்து மறு கோடி வரைக்கும் எந்த ஊரிலே, எந்தத் தெருவிலே இருக்கின்ற கருவியிலேயும் பணம் எடுக்கலாம்.

அடுத்த நிமிடம் கணனி இணைப்பு கணக்கை கூட்டி கழித்து சரி பார்த்துவிடும். பிரிட்டனிலே பல காலமாக இந்த வசதி தெருவுக்குத் தெரு இருக்கு. இப்பொழுது இன்னொரு புதுமையும் செய்திருக்கின்றார்கள்.

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்திலே புதிதாக ஒரு கருவியை வைத்திருக்கின்றார்கள். அதிலே எங்கள் கார்டை சொருகி உலகின் எந்த நாட்டு பணத்தை வேண்டும் என்றாலும் பெற முடியுமாம். எவ்வளவு வசதி பாருங்களேன். இந்தக் கருவியிலே நாம் ஏதாவது தவறு செய்தாலோ அல்லது மோசடி செய்தாலோ எங்கள் கார்டை அந்தக் கருவி முழுங்கிவிடும். பணமும் கிடைக்காது. கார்டும் வராது.எங்கள் ஊரிலேயும் வங்கிகளிலே பல வசதிகள் வந்து கொண்டிருக்கின்றது. இன்னமும் வரும். உள்ளங்கை அகலத்திற்கு ஒரு கார்டை கையிலே வைத்துக் கொண்டு உலகம் பூராக சுற்றி வருவதற்காக காலமும் வரத்தான் போகின்றது.

ஏன் என்றால் ஒரு விடயம்? விஞ்ஞானம் வளரும் போது அதனுடன் சேர்ந்து நாகரிகமும் பண்பாடும் அதே வேகத்திற்கு வளர வேண்டும். அப்பொழுது தான் விஞ்ஞான வளர்ச்சியின் முழுப் பலனையும் நாம் அனுபவிக்க முடியும். இல்லை என்றால் அவஸ்தை தான். இந்தத் தகவலைக் கேட்டுவிட்டு எங்கள் ஊர் திருடர்கள் இரண்டு பேர் ஒரு தெரு வழியாக வந்து கொண்டிருந்தார்கள்.

ஒரு வீட்டுச் சுவரிலே ஒரு சின்னத் துவாரம் தெரிந்தது. அது வழியாக கையை விட்டு, வீட்டுக்குள்ளேயிருக்கின்ற பொருள் எதையாவது எடுக்கலாம் என்று ஐடியா செய்து கொண்டு உள்ளே கையை விட்டான் ஒருத்தன். நிறைய நேரம் உள்ளே கையாலே துளாவிப் பார்த்துக் கொண்டிருக்கின்றான்.

இன்னொருத்தன் பக்கத்திலே நின்று கொண்டிருக்கின்றான். 15 நிமிடம் ஆகிவிட்டது. இவனுக்குப் போர் அடித்துப் போய்விட்டது. சரி உன் கையிலே ஒன்றும் அகப்படவில்லையா? பரவாயில்லை வா வேறு எங்கேயாவது போவோம் என்றான். அதற்கு அவன் என் கையிலே ஒன்றும் அகப்படவில்லை என்பதற்காக நான் இப்படி நிற்கவில்லை. உள்ளே என் கைதான் இப்பொழுது வீட்டுக்காரன் கையில் மாட்டி யிருக்கின்றது. பிடித்துக் கொண்டு விட மாட்டேன் என்கின்றான். அதுதான் இப்படி நிற்கின்றேன் என்றான் மிகவும் சோகமாக.

# இலங்கைப் பாராளுமன்றம் எவ்வாறு தொழிற்படுகின்றது?

28

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



### ஒதுக்கீட்டுச் சட்டமூலம்

வரவு-செலவுத் திட்ட தயாரிப்பின் பிரதான படிமுறைகளின் சாராம்சம் பின்வருமாறு,

நிதியமைச்சு வரவு-செலவுத்திட்ட சுற்றுநிருபத்தை, நடப்பாண்டின் முதற் காலாண்டில் வெளியிடும். அமைச்சுக்கள், அதன் கீழ் இயங்கும் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் உதவியுடன் வரவு-செலவு மதிப்பீடுகளைத் தயாரிக்கின்றன.

நிதி ஆணைக்குழுவானது, அரசியலமைப்பின் விதிகளுக்கமைய மாகாண சபைகளுக்கான ஒதுக்கீடுகளைச் சிபாரிசு செய்து ஜனாதிபதிக்குச் சமர்ப்பிக்கிறது. திறைசேரி இவற்றை கவனத்தில் எடுக்கிறது.

நிதி அமைச்சு, வரவு-செலவு மதிப்பீடுகள் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் முன்னுரிமைகளுக்கும் அமைந்துள்ளதை உறுதிப்படுத்த, ஏனைய அமைச்சுக்களோடு கலந்துரையாடல்களை நடத்தும். அவைகள் பின்பு, இவை அமைச்சரவையின் ஆய்விற்கும் அங்கீகாரத்திற்குமாக அனுப்பப்படும். முடிவு செய்யப்பட்ட இறுதி மதிப்பீடுகள் அரசாங்க வரவு-செலவுத்திட்டத்தில் பற்றாக்குறையை அல்லது மிகையை எடுத்துக்காட்டும். கடந்த பல தசாப்தங்களாக ஒன்றுக்குப் பின் ஒன்றாக வந்த அரசாங்கங்கள் பற்றாக்குறை வரவு-செலவுத்திட்டங்களையே கொண்டுள்ளன. இம் மதிப்பீடுகள், நிதி அமைச்சரினால் ஒதுக்கீட்டுச் சட்டமூலமாக வரவு-செலவுத் திட்டத்தின் முதல் மதிப்பீடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

பொதுவாக, நடப்பாண்டின் ஒக்டோபர் ஆரம்பப் பகுதியில், நிதி அமைச்சர் ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தைச் சமர்ப்பிப்பதே வழமையாகும். பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பின் அது அடுத்துவரும் ஆண்டின் ஜனவரி முதலாம் திகதியில் இருந்து செயலாற்றப்படும். பொதுத்தேர்தலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டு, புதிய பாராளுமன்றம் தெரிவு செய்யப்படாத நிலையில் அல்லது புதிய அரசாங்கம் உறுதி மொழி எடுத்து, செம்மையான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்க அவர்களுக்கு நேரம் போதாத நிலைமையில் இந்த நடைமுறையில் விலக நேரிடுகிறது.

பாராளுமன்றம் அத்தகையதொரு நிலைமையை எதிர்கொள்ளும் போது, அது கணக்கு வாக்குப் பணத்தை கொண்டு வந்து நிறைவேற்ற முனையும். இந்த நடைமுறையானது அரசியலமைப்பிலோ அல்லது நிலையியற் கட்டளைகளிலோ குறிப்பிடப்படாத பாராளுமன்ற மரபாக உள்ளது. பாராளுமன்றம் புதிய திட்டங்களுக்காக அல்லாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கும் திட்டங்களுக்கே நிதியை வழங்குகிறது. சமூகத்திற்குத் தேவையான சேவைகளை பேணிக் கொள்ளும் அளவிற்கே திணைக்களங்களுக்கும் அரச முகவர்களுக்கும் ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.

எந்த ஆண்டினதும் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் அறிமுகப் பந்தியில், சட்டமூலத்தின் பிரதான நோக்கம் பின்வரும் முறையில் சொல்லப்படுகின்றது.

"குறிப்பிட்ட நிதி ஆண்டிற்கான சேவைகளை வழங்கவும் இலங்கைக்கு உள்ளேயும் வெளியேயும் கடன்களைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமளிக்கவும் அச்சேவைகளின் நோக்கத்திற்காகக் குறிப்பிட்ட நிதியாண்டின்போது அரசாங்கத்தின் சில செயற்பாடுகளுக்கு நிதி வசதிகளை ஏற்படுத்திக் கொள்ளவும் கொடுப்பனவுகளை மேற்கொள்ளவும் இவற்றை முன்பணமாக திரட்டிய நிதியிலிருந்து அல்லது அரசாங்கத்திடமுள்ள ஏதேனும் நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளவும் அல்லது அரசாங்கத்திடம் இருக்கும் நிதியிலிருந்து பெற்றுக்கொள்ளவும் அத்தகைய பணத்தை திரட்டிய நிதியத்திற்கு மீளச்செலுத்துவதற்கு ஏற்பாடு செய்வதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய விடயங்களுக்கும் அல்லது அதன் இடைநேர் விளைவான விடயங்களுக்கும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்"

வரவு-செலவுத் திட்ட உரையின் பின்னர் ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு ஆரம்பிக்கப்படுகின்றது. இவ்விரண்டாம் மதிப்பானது உண்மையில் தொடரும் ஆண்டில் வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் அரசாங்கத்தின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு வருமானத்தை திரட்டிக் கொள்வதற்கான அரசாங்கத்தின் ஆலோசனைகளின் விபரமான சமர்ப்பணமாகும்.

ஒதுக்கீட்டுச் சட்டமூலம் விசேட அந்தஸ்தினைக் கொண்டிருக்கின்ற போதிலும் பாராளுமன்றத்தில் சாதாரண சட்டமூலங்களுக்கு பிரயோகிக்கப்படும் அதே விதமான நடைமுறையை இங்கும் பிரயோகிக்கப்படுகின்றது. அதாவது முதல் மதிப்பீட்டின் பின்பு, அதன் ஏற்பாடுகள் அரசியலமைப்பிற்கு அமைவாக உள்ளது. பிரஜையொருவர் உறுப்புரை 121 இன் பிரகாரம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம்.

வரவு-செலவுத்திட்டத்தின் மொத்த நடைமுறைகளுக்காக ஆகக்கூடியது மொத்தமாக 26 நாட்களைப் பயன்படுத்தலாம் என நிலையியற் கட்டளைகள் விதித்துரைப்பது இங்கு கவனிக்கத் தக்கது. இதில் இரண்டாம் மதிப்பீட்டு விவாதத்திற்கென 7 நாட்களுக்கு மேற்படாத நாட்களைப் பயன்படுத்தலாம், மற்றும் மூன்றாம் மதிப்பீட்டிற்கென அல்லது குழுநிலை விவாதத்திற்கென 22 இற்கு மேற்படாத் நாட்களைப் பயன்படுத்தலாம்.

வரவு-செலவுத்திட்ட நாள் அல்லது ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீடு என பொதுவாக அழைக்கப்படும் தினத்தன்று சமூகத்தின் சகல பிரிவினர்களும் வரவு-செலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான அறிவித்தல்களுக்காகக் காத்திருப்பர். நிதி அமைச்சர் தனது வரவு-செலவுத்திட்டப் பெட்டியை சபைக்கு கொண்டு வருவார். இது நாடாவால் கட்டப்பட்டிருக்கும். முன்மொழிவுகளின் இரகசியத் தன்மைக்கான குறியீடாக இது அமைகிறது.

நிதி அமைச்சர் தனது உரையின் முதற்பகுதியில் நாட்டின் பொருளாதாரம், நிதி நிலைமைகள் தொடர்பான அறிக்கையொன்றினைக் சமர்ப்பிப்பார். அரசாங்கம் நடைமுறைப்படுத்த எண்ணியுள்ள வரி அறவிடும் முறைகள், செலவு மட்டங்கள், வட்டி விகிதங்கள், மானியங்கள், சலுகைகள் போன்றவை தொடர்பான முன்மொழிவுகளையும் இரண்டாம் பகுதி உள்ளடக்கியுள்ளது. பொதுவாக நிதி, நிதிக் கொள்கைகள், வெளிநாட்டு உதவிகள், வெளிநாட்டு முதலீடுகள், வேலைவாய்ப்பு, சமூக நலன்கள் போன்றவை தொடர்பான அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இவர் குறிப்பிடுவார்.

வரவு-செலவுத்திட்ட மதிப்பீடுகள் பல ஆண்டுகளாகப் பின்பற்றப்படும் வடிவத்தின் அடிப்படையில் சமர்ப்பிக்கப்படுகின்றன. இவை இரண்டு தொகுதிகளை உடையன. முதலாவது தொகுதியானது 'பல்வேறு அமைச்சுகளினதும் அவற்றின் கீழ் இயங்குகின்ற திணைக்களங்களினதும் மீண்டுவரும் செலவினம் மற்றும் மூலதனச் செலவினம் தொடர்பான அறிக்கையினைக் கொண்டுள்ளது. அவை செலவுத் தலைப்புகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் நிகழ்ச்சித்திட்டங்களாகவும் கருத் திட்டங்களாகவும் வகுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது தொகுதியானது அரசாங்கத் திணைக்களங்களின் முற்பணக் கணக்கு செயற்பாடுகளுடன் தொடர்புடையதாகும். அத்துடன் இது ஆகக் குறைவான பெறுகைகளையும் ஆகக் கூடிய மட்ட செலவினங்களையும் வரையறை செய்கிறது. நிதி அமைச்சர் இவ்வரையறைகளுக்கான மீளாய்வு செய்யப்பட்ட மதிப்பீடுகளை சமர்ப்பித்ததன் பின்பே இவ்வரையறைகளில் ஏதாவது மாற்றமிருப்பின் அதனைப் பாராளுமன்றம் மேற்கொள்ள வேண்டும்.

வரவு-செலவுத்திட்ட சமர்ப்பணத்தையடுத்து ஆகக் கூடியது ஏழு நாட்கள் விவாதம் இடம்பெறும். பாராளுமன்ற அலுவலுக்கான குழு, கூடும் போது அரசாங்கமும் எதிர்க்கட்சியும் சபையில் பேசுவதற்குரிய நேரம் ஒதுக்கிக் கொடுக்கப்படுகிறது. அந்தந்தக் கட்சிகளின் முதற்கோலாசான்கள் விவாதத்தில் பங்குபற்ற விரும்பும் தமது தரப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கும் அதன் உறுப்பினர்களுக்கும் நேரம் ஒதுக்கிக் கொடுப்பர். ஒதுக்கப்பட்ட ஏழு நாட்களின் முடிவில் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீது வாக்கெடுப்பு நடைபெறும். சட்டமூலத்திற்கு ஆதரவாக பாராளுமன்றம் வாக்களித்ததும் அச்சட்டமூலம் முழுச் சபையளாவிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். இதுவே ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழு நிலையாகும்.

தமது அமைச்சுக்களின் கீழ் செயற்படும் உரிய நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்ற அறிக்கைகளை உறுப்பினர்களிடையே விநியோகம் செய்தலானது அனைத்து அமைச்சுக்களாலும் மேற்கொள்ளப்படும் ஒரு வழமையான செயலாகும்.

வரவு-செலவுத்திட்டத்தின்/ ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான குழுநிலை விவாதம் அதிகபட்ச காலமாக 22 நாட்களுக்கு நடத்தப்படும். நிலையியற் கட்டளை 75 (5) பின்வருமாறு கூறுகிறது "இக்கட்டளையின் (1) ஆம் பந்தியில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு தவிர ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை ஆய்வுக்கென ஒதுக்கப்பட்ட நாட்களுள் இருபத்திரண்டு நாட்களுக்கு மேல் ஒதுக்கப்படலாகாது.

அவ்வாறு, ஒதுக்கப்பட்ட நாட்களில் கடைசி நாளன்று பிற்பகல் 6 மணிக்கு சட்ட மூலம் ஏற்கனவே அறிக்கையிடப்பட்டிருந்தாலன்றி அப்போது விவாதத்திலிருக்கும் எவையேனும் திருத்தங்களின் மீதான பிரேரணைகளையும் அதனைத் தொடர்ந்து அத்தலைப்புக்கான அரசாங்கத் திருத்தங்களின் மீதான பிரேரணைகளையும் அத்தலைப்பை நிறைவேற்றத் தேவையான பிரேரணைகளையும் தவிசாளர் உடனடியாகச் சபைக்கு விடுதல் வேண்டும். அதன் பின்னர் ஒவ்வொரு அமைச்சின் தலைப்புக்கள் தொடர்பாகவும் பிரேரணையை உடனடியாகச் சபைக்கு விடுதல் வேண்டும்"


ஒவ்வொரு அமைச்சின் கணக்கு வாக்கிற்கும் சபை எவ்வளவு நேரம் ஒதுக்க வேண்டுமென்பதை எதிர்க்கட்சி தீர்மானிக்கும். அதையடுத்து எதிர்க்கட்சி பேசுவதற்குக் கூடுதல் நேரம் பெறத்தக்க வகையில் அரசாங்கத்திற்கும் எதிர்க் கட்சிக்குமிடையே நேரம் ஒதுக்கீடு செய்யப்படும்.

ஒவ்வொரு தலைப்பின் மீதுமான ஆய்வின் முடிவில் அவற்றின் வாக்கெடுப்புக்கான வினா சபைக்கு விடப்படும். ஆனால் ஒவ்வொரு தலைப்பின் மீதும் எதிர்க்கட்சி வாக்கெடுப்பைக் கோரலாம். அனைத்துத் தலைப்புக்கள் மீதுமான விவாதம் முடிவுற்ற பின்னரே வாக்கெடுப்பிற்கு விடும் வழக்கமொன்று விருத்தி செய்யப்பட்டுள்ளது.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு உறுப்பினரும் தனது கருத்தைத் தெரிவிப்பதிலுள்ள நேரத்தை விடக் கூடுதலான உறுப்பினர்கள் இடையீடு செய்வதற்கு விரும்புகின்றனர். எனவே உரிய கட்சிகளுக்கென நேர ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.

(தொடரும்...)

# நான்கு கொரோனா மருந்துகளுக்கு அனுமதி



(கொழும்பு)


**கொரோனா வைரஸினைக் கட்டுப்படுத்தக்கூடிய நான்கு மருந்துகளுக்கு தேசிய ஆராய்ச்சி பேரவை அனுமதி வழங்கியுள்ளது.**

அதன்படி ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தின் அஸ்டிராஜெனேகா, மொடேர்னா, பைசர் பயோன்டெக் ஆகியவற்றின் மருந்துகளுக்கும் ரஷ்யாவின் ஸ்புட்னிக் ஆகியவற்றிற்கே தேசிய ஆராய்ச்சி பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டில் பயன்படுத்துவதற்கு பொருத்தமானவை என தேசிய ஆராய்ச்சி பேரவையின் தலைவர் ஹெமந்த டொடாம்பஹல தெரிவித்துள்ளார்.

இந்த நான்கு மருந்துகளில் இலங்கைக்கு பொருத்தமான மருந்தினை பெறுவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சுகாதார அமைச்சினை கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-2)

# ஆலய வழிபாடு ஏன்–எதற்கு – எப்படி



## திருநீறு ஏன் பூச வேண்டும்?

(தொடர்ச்சி)

அண்மைக்காலமாக வாசனைத் திரவியங்களையும் கலந்து விபூதி தயாரிக்கின்றார்கள். இதிலும் தவறு இல்லை. ஆனால் நாம் பூசும் திருநீறு தூய்மையான நல்ல பால் போன்ற வெள்ளை நிறமாக இருக்க வேண்டும். இந்த திருநீற்றை நாம் அவசியம் பூசித்தான் ஆக வேண்டுமா? என்று நம்மில் சிலர் நினைக்கலாம். ஈசனை நான் மனதுக்குள் வைத்துப் பூஜிக்கின்றேன். அப்படி இருக்கும் போது திருநீறு ஏன் பூச வேண்டும்? பக்தியும் இறைவன் மீதான பற்றும் மனதுக்குள் இருந்தால் போதாதா? என்று சிலர் நினைக்கலாம்.

அது தவறு. ஏனெனில் சிவபெருமானுக்கே உரியதாக திருநீறு கருதப்படுகிறது. அதனால் அபிஷேகப் பொருட்களில் ஒன்றாக விபூதியும் இடம்பெற்றுள்ளது.

திருநீற்றின் மகிமையை நால்வரும் மற்றும் சிவனடியார்களும் சித்தர்களும் தங்களது பாடல்கள் மூலம் கூறியுள்ளனர். திருநீறு அணிபவர்கள் என்னென்ன பயன்கள் பெறுவார்கள் என்று திருஞானசம்பந்தர் "திருநீற்றுப் பதிகம்" பாடியுள்ளார்.

திருமூலர் தனது திருமந்திரத்தில் தினமும் திருநீறு பூசுபவர்கள் நிச்சயம் ஈசன் திருவடி சேர்வார்கள் என்று கூறியுள்ளார். மாணிக்கவாசகர் தமது பாடலில் கொலைகாரருக்குக் கூட நான் பயப்பட மாட்டேன். ஆனால் திருநீறு பூசாமல் இருப்பவர்களைக் கண்டால் பயப்படுவேன் என்று கூறியுள்ளார். நீறு இல்லாத நெற்றிபாழ் என்று ஔவையார் குறிப்பிட்டுள்ளார். திருநாவுக்கரசர் திருவதிகை தலத்துக்கு வந்து திருநீறு பூசிக் கொண்ட பிறகே நோய் குணமாகி தேவாரப் பதிகங்களைப் பாடத் தொடங்கினார்.

இப்படி சிவனடியார்களும் சித்தர்களும் திருநீற்றின் சிறப்புப் பற்றிக் கூறி இருப்பதை சொல்லிக் கொண்டே போகலாம்.

எனவே நாம் தினமும் காலையில் குளிப்பது போல திருநீறு அணிவதும் அசியமான ஒன்றாகும். திருநீறு அணிந்தவர்களைக் கண்டால் சிவபெருமான் மிகவும் மகிழ்ச்சி அடைவார் என்று இந்து மத நெறியில் கூறப்பட்டுள்ளது.

அது மட்டுமல்ல திருநீறு என்பது அதை பூசுபவர்களுக்கு வாளாகவும் கேடயமாகவும் உள்ளது. மேலும் திருநீறு பூசிக் கொள்வதில் பல்வேறு தத்துவங்களும் விஞ்ஞான அடிப்படையிலான உண்மைகளும் அடங்கியுள்ளன.

இதில் முதன்மையாக இருப்பது, திருநீறு பூசுபவர்களிடம் மூதேவி நெருங்க மாட்டாள் என்பதாகும். ஒவ்வொருவரின் கழுத்துக்கு மேல் சதுர திருத்தி என்ற தேவி சுற்றிக் கொண்டிருக்கிறாள். இவளை மூதேவி என்று சொல்லுவார்கள். எவன் ஒருவன் தன் நெற்றியில் திருநீறு தரிக்கிறானோ அவன் அருகில் செல்ல மூதேவி பயப்படுவாள் என்று கிருஷ்ண யஜுர் வேதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அறுகம்புல், பசும்புல் மட்டுமே சாப்பிடும் இளம் பசுவிடம் இருந்து பெறப்படும் சாணத்தில் இருந்து தயாரிக்கப்படும் திருநீறுக்கு அதிர்வுகளை தாங்கும் சக்தி உள்ளது என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். அதாவது நம்மைச்சுற்றி எத்தனையோ எண்ண அதிர்வுகள் வந்து போகும்.

இந்த அலைகளும்,அதிர்வுகளுக்கும் மத்தியில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சில அதிர்வுகள் நம் வாழ்வையே திசை திருப்பி விட்டு விடும்.

நெற்றி (1), கழுத்து (1), கைகள் (2), மார்பு (1) தொப்புள் (1), குறி (1), வயிறு (1), ப்ருஷ்டங்கள் (2), பாதங்கள் (2), முழங்கால்கள் (2), விலா பக்கங்கள் (2) ஆகிய 16 இடங்களில் திருநீறு பூசிக் கொள்கிறார்கள். இது நமது உடம்பில் உள்ள அதி தெய்வங்களை மகிழ்ச்சி அடையச் செய்யும். (தொடரும்)

# செய்தித்துளிகள்

## திருகோணமலைக்கு பயணிப்போருக்கு எச்சரிக்கை

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவுவதற்கான ஆபத்து கூடுதலாக காணப்படுவதால் தேவையான விடயங்களுக்காக மாத்திரம் அப்பகுதிக்கு பயணம் செய்யுமாறு கிழக்கு மாகாண ஆளுநர் திருமதி அநுராதா யஹம்பத் பொதுமக்களை அறிவுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் விடுமுறைக் காலத்தில் பயணங்களை வரையறுத்துக் கொள்ளுமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவலைத் தவிர்ப்பதற்குத் தேவையான தீர்மானங்களை மேற்கொள்ளும் மாகாணக் குழு, ஆளுநர் செயலகத்தில் நேற்று முன்தினம் காலை கூடிய போது அவர் இந்த விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் திருகோணமலை மாவட்டத்திற்கு வருவோர் தொடர்பில் விசேட கவனம் செலுத்துமாறும் தற்போதுள்ள சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறும் அவர் பாதுகாப்புத் தரப்பினரை பணித்துள்ளார். (ஜ-2)

## 64 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கியுள்ள 64 இலங்கையர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி, மாலைதீவிலிருந்து 13 பேரும் கட்டாரிலிருந்து 51 பேரும் நேற்று வியாழக்கிழமை காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர். இவ்வாறு நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர் அவர்கள் அனைவரும் தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## அத்தியாவசியசேவை ஊழியர்கள் முற்கூட்டியே வாக்களிக்கலாம்

(கொழும்பு)

அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுவோருக்கு முற்கூட்டியே வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் புதிய நடைமுறைகளைத் தயாரிப்பதில் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

புதிய நடைமுறைகளை தயாரிப்பதற்காக, தெரிவுக் குழுவொன்றை நியமிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர், சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் சுமார் 2 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர்.

அவர்களின் பெயர்கள் வாக்காளர் இடாப்பில் உள்ள போதிலும் அவர்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பம் அற்றுப் போவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன், வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதாரத் தரப்பினர், ஊடகவியலாளர்கள், வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளர்கள், சிறைக்கைதிகள் உள்ளிட்டோருக்கும் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியுள்ளதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்வாறானோருக்கு தேர்தலுக்கு முன்னதாக முற்கூட்டியே வாக்களிப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்கும் நடைமுறையை சட்டத்தில் உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-2)

## உயிரிழந்த நிலையில் ஒதுங்கும் மீன்கள்

(அம்பாறை)

அம்பாறை திருக்கோவில் கடற்கரையில் உயிரிழந்த நிலையில் மீன்கள் கரையொதுங்கியுள்ளன. சுமார் 1000 கிலோ கிராமிற்கு அதிகம் எடைகொண்ட மீன்களே இவ்வாறு கரையொதுங்கியுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கரையொதுங்கியுள்ள மீன்களை நாய்கள் மற்றும் காகங்கள் உண்ணுவதாகவும் இதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்நிலையில் குறித்த மீன்களை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (ஜ-4)




# உலகில் சிறந்தது

மன்னரிடம் சில காலம் முல்லா அமைச்சராக இருந்த பொழுது, முல்லாவை எப்போதுமே மன்னர் தன்னுடனே வைத்துக் கொண்டு உரையாடி மகிழ்வார்.

மன்னர் உணவருந்தும் சமயத்தில் எல்லாம் முல்லாவையும் தம்முடன் அமர்ந்து உணவருந்தச் சொல்வார். ஒருநாள் மன்னரும் முல்லாவும் வழக்கம் போல அருகருகே அமர்ந்து உணவருந்தினார்கள்.

அப்போது மன்னர் முல்லாவை நோக்கி, முல்லா உலகத்திலேயே மிகவும் சிறந்த காய் பீன்ஸ் என்று நான் நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்? என்று கேட்டார்.

முல்லா ஆமாம் மன்னா! அவற்றையே நானும் நினைக்கிறேன் என்றார். உடனே மன்னர் சமையற்காரனை அழைத்து, இனிமேல் அன்றாடம் ஏதாவது ஒரு உருவத்தில் பீன்ஸை உணவுடன் சேர்ந்து விடு என்று உத்தரவிட்டார்.

நாள் தவறாமல் உணவில் பீன்ஸை சேர்த்துக் கொண்டதால் மன்னருக்கு அந்த காயின் மீது சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்டது. அன்றைய தினம் இருவரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதும் பீன்ஸ் பரிமாறப்பட்டது.

மன்னர் முல்லாவை நோக்கி உலகத்திலேயே மிகவும் மோசமான காய் பீன்ஸ் என்று தான் நினைக்கிறேன். நீர் என்ன நினைக்கிறீர்? என்று கேட்டார்.

ஆமாம் மன்னா! எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. நான் அறிந்ததில் இவ்வளவு மோசமான சுவையே இல்லாத பீன்ஸை போன்ற காயைக் கண்டதே இல்லை என்றார் முல்லா.

என்ன முல்லா? பத்து நாட்களுக்கு முன்னால் நான் கேட்டபோது உலகத்திலேயே மிகவும் சிறந்த காய் பீன்ஸ் என்றீர்கள். இப்பொழுது தலைகீழாக மாற்றிப் பேசு கிறீரே என்று மன்னர் கேட்டார்.

முல்லா சிரித்துக்கொண்டே மன்னர் அவர்களே! என்ன செய்வது? நான் தங்களிடம் அல்லவா! வேலை பார்க்கிறேன்.

**நீதி:**
**மனமானது மாற்றத்தை விரும்பக்கூடியது.**



# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சென்றதில்லையா? வென்றதில்லையா?

**65**



தன்னுடைய பலத்தை மாத்திரம் நம்பிக் களத்தில் இறங்குவதைவிட எதிரியை, எதிரியின் பலத்தை முக்கியமாகப் பலவீனத்தை, எதிரிகளின் ஆதரவு வட்டத்தை, எதிரிகளின் எதிரிகள் வட்டத்தை என்று எதிரிக்குத் தொடர்புடைய அத்தனை விடயங்களும் இருந்தால் சுலபமாக வியூகம் அமைக்கலாம், வித்தை காட்டலாம், வெற்றி அடையலாம்.

அலெக்சாண்டரின் முக்கியமான அணுகு முறைகளுள் இதுவும் ஒன்று. எதிரி பற்றிய தகவல்களை எப்படிச் சேகரிப்பது? அதற்கு மூன்றெழுத்து நல்ல வார்த்தை ஒன்று உண்டு. உளவு.

எதிரியின் கோட்டையில் இருந்து கொட்டடி வரை சென்று இரகசியமாகத் தகவல் திரட்டித்தருவதற்கென்று வல்லமை பொருந்திய உளவுப்படை அலெக்சாண்டர் வசம் இருந்தது. வெட்டி வா என்றால் வெட்டிக்கட்டிக்கொண்டு வரக்கூடிய சாமர்த்தியசாலிகள்.

உளவு வீரரின் பணிகள் எப்படி இருக்க வேண்டும் தெரியுமா? பருந்து போல எதிரியின் தலைக்கு மேலே பறந்து உளவு பார்க்க வேண்டும். அது சரிதானா? என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள மண்புழு போல அவதாரம் எடுக்க வேண்டும்.

அவர்களோடு ஊர்ந்து பழக வேண்டும். அவர்களோடுதான் சுவாசிக்க வேண்டும். எல்லாம் அவர்களுடன். துளியும் சந்தேகம் வராமல் செய்ய வேண்டும். அதில்தான் திறமை இருக்கிறது. அதுதான். சூட்சுமம். அலெக்சாண்டரின் ஒவ்வொரு வார்த்தையும் வீரர்களை அப்படியே மெய்சிலிர்க்க வைக்கும்.

தன்னுடைய உளவுப் படையில் அலெக்சாண்டர் சேர்த்துக் கொண்ட அத்தனை பேரும் பருந்தாகப் பறக்கக்கூடியவர்கள். மண்புழுவாக ஊர்ந்து செல்லக்கூடியவர்கள்.

சில சமயங்களில் அலெக்சாண்டரே நேரடியாக உளவு வீரர்களைத் தொடர்புகொண்டு தேவைப்பட்டியலை அளிப்பார். தகவல்களைப் பெற்றுக்கொள்வார். அவர்களிடம் யாரைப் பற்றிக் கேட்டாலும் தகவல்கள் கிடைக்கும்.

(தொடரும்)

அன்பு செலுத்த உத்தரவு இடுவதே
எனது இறுதிக் கட்டளை!
– இயேசுநாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இயேசுபிரானின் போதனைகளை பின்பற்றி வாழ்வோம்

இன்று நத்தார் பெருவிழா. இயேசு பிரான் அவதரித்த திருநாள்.

அவதாரங்கள் யுகங்கள் தோறும் நடந்தாகின்றன.

இறை பரம்பொருள் அவதார புருசர்களை இப்பூமியின் கண் அனுப்பி, அவர்களினூடு மக்கள் சமூகத்துக்கு தர்மத்தை எடுத்துரைக்கின்றார்.

ஆம், பாவக் கயிற்றில் கட்டுண்டு மெய்ஞான ஒளியை அறியாத மனித சமூகத்தை மீட்பதற்காக அவதரித்த இயேசு பிரான், மக்களை நல்வழிப்படுத்த போதனை செய்தார்.

அவர் அருளிய போதனைகள் மனித குலத்தை இன்றுவரை வழிப்படுத்தி நிற்பதை நாம் காண முடியும்.

எனினும் இயேசுபிரானின் போதனைகளைப் புரிந்து கொள்ளாத ஒரு தரப்பினர் இன, மத, மொழி பேதங்களுக்குள் வீழ்ந்து பாவம் செய்கின்றனர்.

இதைப் பார்க்கும்போது வேதனைப்படுவதைவிட வேறுவழி தெரியவில்லை.

உன்னைப் போல் பிறரையும் நேசி என்றுரைத்த பிதாமகன்; ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் கொடு என்றார்.

ஒரு கன்னத்தில் அறைந்தவனிடம் மறு கன்னத்தையும் காட்டு என்பதற்குள் இருக்கக்கூடிய தத்துவங்கள் தெய்வீகமானவை.

உன் எதிரியையும் உன்னை வஞ்சிப்பவரையும் தண்டித்து விடாதே.

அவர்களையும் திருத்து. உனது ஒரு கன்னத்தில் அறைந்தவனுக்கு மறு கன்னத்தையும் நீ காட்டும்போது அவன் வெட்கித் தலை குனிவான். தான் செய்தது தவறு என்பதை இதயத்தால் உணர்ந்து கொள்வான்.

அது அவனை நன் மனிதனாக்கும். உன் கன்னத்தில் அறைந்தவனுக்கு நீயும் பதிலடி கொடுப்பாயானால், சண்டையும் சச்சரவும் நிம்மதியற்ற வாழ்வுமே இந்த உலகுக்கு உரியவையாகிவிடும்.

ஆகையால் தீயவர்கள் வளர்வதற்கு நீ அனுமதித்து விடாதே. அவர்கள் உன்னைச் சந்தித்தால் அவர்களை நல்வழிப்படுத்து. இதுவே இயேசு பிரானின் போதனை.

ஆனால் இன்று இயேசுவின் போதனைகளை வகைப்படுத்தி, அவற்றுக்கென்று தனித் தனிச் சபைகள் அமைத்து, மதமாற்றம் செய்கின்ற ஈனச் செயலில் சிலர் இறங்கி இருப்பது கண்டு இயேசுபிரான் நிச்சயம் உதிரம் கொட்டுவார்.

ஆம், அன்று தன்னைச் சிலுவையில் அறைந்தபோது தந்தையே! என்று அழைத்த இயேசுபிரான் மதமாற்றம் செய்வோரின் ஈனத்தனம் கண்டு தந்தையே... தந்தையே... என்று நிச்சயம் அழைப்பார்.

அந்தளவுக்கு பிற சமயங்களை நிந்தித்து, பிற சமயத்தவர்கள் வழிபடுகின்ற கடவுளை சாத்தான் என்று கூறுகின்ற மிலேச்சத்தனம் இந்த உலகைப் பாவக் கிடங்கில் வீழ்த்துகிறது.

ஆகையால் அன்புக்குரிய சகோதரர்களே! இயேசுபிரானின் போதனைகளைப் பின்பற்றுவோம். அவரின் போதனைகள் இந்த உலகில் சமாதானத்தை தந்தருளும்.

### மஹர சிறை துப்பாக்கிச் சூட்டு சம்பவம்

# அரசு சொன்ன பொய்கள் விசாரணை அறிக்கையில் அம்பலம்

## ஜே.வி.பி குற்றச்சாட்டு

(கொழும்பு)

மஹர சிறைச்சாலையில் இடம்பெற்ற துப்பாக்கி சூட்டினால் 11 சிறைக் கைதிகள் உயிரிழந்துள்ளனர். உண்மையை மூடி மறைக்க அரசாங்கம் சொன்ன பொய்கள் விசாரணை அறிக்கைகளில் அம்பலமாகியுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

ஜே.வி.பி தலைமையகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

மஹர சிறைச்சாலையில் 11 சிறைக் கைதிகள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். வத்தளை நீதவான் நீதிமன்றத்தில் அது சம்பந்தமான வழக்கு விசாரிக்கப்பட்டு வருகின்றது. நான்கு பேரின் மரணத்திற்கான காரணம் துப்பாக்கியால் சுடப்பட்டமையே என வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

அதற்கு முன்னரும் 04 பேர் சுட்டுக் கொல்லப்பட்டதாக உறுதிசெய்யப்பட்டது. 11பேரில் 08 பேர் சுடப்பட்டதாலேயே இறந்ததாக உறுதிசெய்யப்பட்டுள்ளது. சிறைச்சாலைகள் அமைச்சர் இந்த நிலைமையை மூடிமறைக்க துப்பாக்கிச் சூட்டினால் எவருமே இறக்கவில்லை எனக் கூறினார்.

ஆனால் விசாரணைக் குழு அறிக்கைகளில் துப்பாக்கிச் சூட்டினால் சிறைக் கைதிகளின் மரணங்கள் சம்பவித்தமை உறுதியாகின்றது. அமைச்சர்களின் பொய் அம்பலமாகியது. நீதிமன்றத்தின் பிணையில் செல்ல விடுதலை செய்யப்பட விருந்த பெரும்பாலானோர் சிறைச்சாலையில் இருந்தார்கள்.

பிணை கிடைத்திருந்தவர்களை வெளியே போடுமாறே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட சிறைக்கைதிகளின் முதலாவது கோரிக்கையாக அமைந்திருந்தது. இரண்டாவது பி.சி.ஆர். பரிசோதனைகளை மேற்கொள்ளுமாறும் மூன்றாவது வேறு முகாம்களில் இருந்து கொரோனாவால் பீடிக்கப்பட்டவர்களை கொண்டுவர வேண்டாமென்பதேயாகும். மற்றது உணவு வழங்குவதை முறைப்படி மேற்கொள்ள வேண்டுமென்பதாகும். அப்படி கேட்டவர்களுக்குத்தான் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காக வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார். (ம)

## மோ.சைக்கிள் விபத்து இளைஞன் படுகாயம்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் வேகக்கட்டுப்பாட்டையிழந்த மோட்டார் சைக்கில் மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதுடன் மோட்டார் சைக்கிளுடன் சாரதி 50 மீற்றர் தூரம் வரை தூக்கி வீசப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, பூங்கா வீதியில் யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாகத்திற்கு அருகாமையில் நேற்று மதியம் இடம்பெற்ற இவ் விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

நூலக வீதியூடாக புகையிரத நிலைய வீதிநோக்கி பயணித்த மோட்டார் சைக்கிள் யாழ்.பல்கலைக் கழக வவுனியா வளாகத்திற்கு அருகாமையில் கட்டுப்பாட்டையிழந்து வீதியில் அருகேயிருந்த மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியதுடன் மரத்தடியிலிருந்து சுமார் 50 மீற்றர் தூரம் வரை மோட்டார் சைக்கிளும் அதன் சாரதியும் தூக்கி வீசப்பட்டனர்.

இதில் படுகாயமடைந்த நிலையில் காணப்பட்ட மோட்டார் சைக்கிளின் சாரதியான 23 வயது மதிக்கத்தக்க இளைஞன் பொதுமக்களின் உதவியுடன் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம)

## இரத்ததானம்

(குப்பிழான்)

யாழ்ப்பாணம் தங்க நட்சத்திர.லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை-09 மணி முதல் நண்பகல் 12 மணி வரை கொழும்புத்துறை சனசமூக நிலையத்தில் இரத்ததான முகாம் இடம் பெறவுள்ளது.

தற்போதைய கொரோனா அசாதாரண சூழலைக் கருத்திற் கொண்டு சுகாதார நடைமுறைகளுக்கமைய நடைபெறும் குறித்த இரத்ததான முகாம் நிகழ்வில் ஆர்வமுள்ள குருதிக் கொடையாளர்கள் அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றிக் கலந்து கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (5.4.18)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



## சுறுசுறுப்பாகத் திகழுங்கள்

- நெம்முடைய உடலையும், அறிவையும், ஞானத்தையும் பலவீனமாக்கும் எதையும் விஷம் என ஒதுக்கிவிட வேண்டும்.
- பிறருடைய தவறு எவ்வளவு கெட்டதாக இருந்தாலும் அதுபற்றி பேசக்கூடாது. அப்படிச் செய்வதனால் நீங்கள் அவனுக்கு கேடு செய்வதுடன், உங்களுக்கும் கேடு ஏற்படுத்திக் கொள்வீர்கள்.
- தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் வேறு எதற்கும் வசப்படமாட்டான், அவனே உலகில் நன்றாக வாழ தகுதியுள்ளவன்.
- எதிலும் பரபரப்பு தேவையில்லை, ஆனால், சுறுசுறுப்பு எப்போதும் தேவை.
- கீழ்ப்படிதல், முயற்சியுடைமை, செயலாக்கம் ஆகிய மூன்றும் இருந்தால், ஒருவன் வெற்றி பெற்று முன்னேறுவதை எதனாலும் தடுக்க முடியாது.
- உலகத்தில் உயர்ந்த செயல்கள் அனைத்தையும் சாதித்தவர்கள் உங்களையும் என்னையும் போன்று மனிதர்களே. வீரம் மட்டுமிருந்தால் நம்மைப் போன்ற மனிதர்கள் எதையும் செய்து முடிக்க முடியும்.
- இயந்திரங்கள் மனித சமூகத்திற்கு சுகத்தைக் கொடுத்தவையுமல்ல, கொடுக்கப் போவதுமில்லை.

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்க D பிரிவு வழங்கும்


# வட இலங்கையின் கடலக செழிப்பும் கடல் மற்றும் நீரியல்வள விஞ்ஞானத் துறைசார் கற்கைநெறிகளின் தேவைப்பாடும்

K.குணாளன்,
தகுதிகாண் விரிவுரையாளர், மீன்பிடியியல் விஞ்ஞானத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

(11.12.2020 திகதிய தொடர்ச்சி)

கடலோர சூழல் தொகுதியின் பொறியியலாளர்கள் எனப்படுபவை கண்டல் காடுகள் ஆகும். கடலரிப்பை தடுத்து குடை பிடிக்கும் இவை வடக்கிற்கான ஒரு கொடை என்றே கூற வேண்டும். அவை மனிதனின் உணவுத் தேவை முதல் உறையுள் தேவை வரை ஏன் பல நோய்களுக்கான தடுப்பு மருந்தாக கூடப் பயன்படுகின்றன.

அது மட்டுமா உலக வெப்பமயமாதலில் இருந்து நம்மைக் காப்பதில் கண்டல் காடுகளின் சேவை அளப்பரியது. இத் தொகுதியில் காணப்படும் காபன் பின்வாங்குதல் **(Carbon Sequestration)** அதாவது $CO_2$**(g)** வெளியாதலை மிக தாமதப்படுத்துவதனூடு வளிமண்டலத்தின் அவற்றின் வெளியிடலை கட்டுப் படுத்துகிறது.




ஆனால் இவை எவற்றையும் அறியாத நாம் மிக சாதாரணமாக அவற்றை வெட்டி அழித்து சட்டவிரோத மீன்பிடி முறைகள் மற்றும் பல இன்னோரன்ன தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றோம்.

வடமாகாணத்தில் இழையோடியிருக்கிற புற்றுநோய்க்கான தடுப்பு மருந்து உருவாக்கத்திற்காக ஓர் மருந்தாக காணப்படும் பவளப்பாறைகளின் உயிரிகள் மன்னார் முதல் பருத்தித்துறை கடலோரம் வரை பரந்துள்ள பவளப் பாறை தொகுதிகளில் காணப்படும் கடற் பஞ்சுகள் **(Sponges)** எனப்படும் உயிரினம் **Anti-cancer vaccine** புற்று நோய் எதிர்ப்பு தடுப்பு மருந்து தயாரிப்பிற்கான ஆய்வில் முக்கிய பங்களிப்பு செய்கின்றது.

இயற்கை சீற்றங்களான புயல், சூறாவளி, கடல் கோள், கடலரிப்பு என்பவற்றிலிருந்து கடலோரத்தைப் பாதுகாக்கவும் கடல் உயிரிகளைப் பாதுகாக்கவும் ஏன் காலநிலையைச் சீராக்கவும் பவளப்பாறை சூழல் தொகுதிகள் காரணமாகவும் பாதுகாப்பு அரணாகவும் விளங்குகின்றன.

கடல்வாழ் பூக்கும் தாவர வகையை சேர்ந்தது கடற்புற்கள் ஆகும். அவையும் சமுத்திர காபன் வட்ட மூடு உலக வெப்பமாதலின் தீவிரத்தை குறைப்பதில் பங்களிப்புச் செய்கின்றன. அதுமட்டுமா பல கடல் உயிரினங்களின் மேய்ச்சல் தரை ஆகவும் இனப்பெருக்க தளங்களாகவும் செயற்படுகின்றன.

அதிலும் குறிப்பாய் கடலாமைகள் மற்றும் மிக அச்சுறுத்தலுக்கு உள்ளான உயிரினமான கடல் பன்றி **(Dugong)** களின் பிரதான உணவாகவும் உள்ளது. கடல் பன்றிகளின் ஆதிக்கம் மன்னார் பரப்பில் காணப்படினும் அவை மிக மோசமான அளவில் அழிவடைந்து வருகின்றமை வருத்தத்திற்குரியதாகும்.

யூக்கியுமியா **(Eucheuma)** சிவப்புபாசி **(Red Seaweed)** வகையைச் சார்ந்தது. இது வடகிழக்கு கடற்கரையோரங்களில் இயற்கையாக காணப்படுவதோடு இலகுவில் வளர்க்கப்படக் கூடியது. கராயினன் **(Carrageenan)** என்ற இரசாயன தாதுப் பொருள் யூக்கியுமியாவில் இருந்து பிரித்தெடுக்கப்படுகிறது.


இது உணவுச்சுவையூட்டியாக பொருளாதார முக்கியத்துவமுடைய வகையில் பெறுமதி சேர்க்கப்பட்டு பயன்பட்டு வருகிறது. மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் கடல்பாசி வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது. இது துணை வருமானத்துக்கான சிறுதொழிலாக பிரபல்யமாக செய்யப்படுவதோடு இலாபகரமானதும் ஆகும்.

ஆக மொத்தத்தில் மிக அதிகளவான கடற்கரையோரம், மிக பரந்த கண்ட மேடை, உயிர்ச்சூழல் பல்வகைமை தொகுதிகள், உயிரியல் மற்றும் உயிரற்ற கனியவள மூலச் சொத்துக்கள் என பொருளாதார வளம் கொழிக்கும் வட இலங்கையின் கரையோர மாவட்டங்கள் விளங்கினும் அவற்றின் கடலக வளங்களைப் பாதுகாப்பதன் அவசியமும் நீடித்த பயன்மிகு வள நுகர்வின் இன்றியமையாமையும் இன்னும் முழுமையாக உணரப்படவில்லை என்பது யதார்த்தம்.

இதற்கான முக்கிய காரணமாக வடக்கில் கடல் விஞ்ஞானம் துறைசார் அறிவுத்தள இடைவெளி மிகமிக அதிகமாக உள்ளது. கடலியல்சார் கற்கைநெறிகளின் தெரிவுகளும் வாய்ப்புக்களும் எந்தளவில் உள்ளன என ஆராய்ந்தால் "மீன்பிடியியல்" என்பது மட்டும் தான் பலரின் பொதுவான எண்ணப்பாடாக உள்ளது.

இப்பொதுக் கணிப்பினால் பல்கலைக் கழகங்களிலுள்ள மிக எல்லைப்படுத்தப் பட்ட கடல்சார் துறையோடான கற்கை நெறிகளின் நாட்டமின்மை யதார்த்தமாகிவிட்டது. மீன்பிடியியல் மட்டுமல்ல அதனோடிணைந்து சமுத்திரவியல், நன்னீரியல், நீருயிரின வளர்ப்பு, கடலக கனியவள அகழ்வுகள், கடல்சார் பொறியியல், கடல் போக்குவரத்து மற்றும் உல்லாசப் பிரயாணத்துறை எனப் பற்பல கற்கைகள் விரிந்து செல்கின்ற போதிலும் இவை அனைத்திலும் மிக அதிகபடியான மாணவ மற்றும் ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள கடல்சார் கற்கைகளை நோக்கினால் யாழ்.பல்கலை விஞ்ஞானபீட மீன்பிடியியல் துறையில் இளம் விஞ்ஞானமாணி மீன்பிடியியல் சிறப்பு பட்டப்படிப்பினை வழங்குகின்றது.




அத்தோடு சமுத்திரவியல் பல்கலைக் கழக பிராந்திய நிலையத்தில் தொழிற் கல்விசார் பயிற்சிநெறிகள் வழங்கப்படுகின்றன. எனவே பரந்துபட்ட கடல்சார் விஞ்ஞான கற்கைகளுக்கு துறைசார் பீடம் மிக அவசியமாகிறது.

கற்றது கையளவு கல்லாதது உலகளவு என்பது நம் பழமொழி. அதேபோல் நம் வடக்கில் உள்ள கடல்சார் வளங்களில் இங்கு குறிப்பிடப்பட்டவையும் மிகச் சொற்பமே.

எனவே இவ்வளங்களின் முக்கியத்துவம், அவற்றின் பயன்பாடு, அவைசார் நிலைத்து நீடிக்கும் அபிவிருத்தி செயற்பாடு, அவ்வளங்களின் பாதுகாப்பு, அவைசார் சமூகப் பொருளாதார மேம்பாடுகள் எனப் பல கோணங்களில் ஆவணப்படுத்த வேண்டியதன் அவசியம் உணரப்படுகிறது.

இவ் ஆவணப்படுத்தல்கள், தொடர்ச்சியான அவதானிப்புக்கள், கண்காணிப்பு மற்றும் ஆய்வுகள், அவற்றின் நீண்டகால தொடர் சேவைகளை இடையூறின்றிப் பெற வழிகோலுமென்பதோடு எதிர்காலத் திட்டமிடல்களுக்கும் பங்களிப்புச் செய்யும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

எனவே இவ்வாறான செயல் முறைகளை நடைமுறைப்படுத்த வடமாகாணத்தில் கடல்சார் விஞ்ஞான கற்கைகள் தோற்றுவிக்கப்படுதல் மிக அத்தியாவசியமாகிறது. அத்தோடு பிரதானமாக யாழ்.பல்கலையில் **Masterplan** இல் ஏலவே குறிப்பிட்டபடி **JICA 2010** யாழ்.மாவட்ட அபிவிருத்தித் திட்டத்தில் முன்மொழியப்பட்ட கடல்சார் விஞ்ஞானத்துக்கான பீடம் ஒன்றின் தேவைப்பாடு காலத்தின் கட்டாயமாகவும் கடலக செல்வம் கொழிக்கும் வட கடல் பகுதியின் நிறைவான நீடித்து நிலைபெறும் அபிவிருத்திக்குரிய ஆளணிகளை உருவாக்குவதற்குரிய கடல்வள விஞ்ஞான ரீதியானதும் தொழில்நுட்பத்துடன் கூடிய கற்கை நெறிகளை வழங்கி அதனூடாக கடலகத் துறைசார் சந்ததிகளை உருவாக்குதல் இன்றியமையாததாகும்.

(முற்றும்)

## மதுச்சாலைகள்...

படுவதாக கலால் திணைக்களம் அறிவித்துள்ளது.

எனினும் உரிமம் பெற்ற ஹோட்டல்களில் உள்ள மதுபான நிலையங்களை மூடுவதற்கு எந்த நடவடிக்கையும் இல்லை என்று கலால் துறை தெரிவித்துள்ளது. (ம)

## முச்சக்கரவண்டி...

தில் அதன் சாரதி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் தட்சயன் (வயது-28) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மேலும் உயிரிழந்தவரின் தந்தை தனது மகனின் மரணச் செய்தி கேட்டு தனது கழுத்தை அறுத்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை தர்மபுரம் மற்றும் கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-315,316)

## விலங்குக்கு...

காப்புபடை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக மாமடுவ பொலிஸார் தெரிவித்தனர்.

விலங்குகளை வேட்டையாடுவதற்காக வைக்கப்பட்ட மின் இணைப்பில் சிக்கியே சிவில் பாதுகாப்பு படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வவுனியா மகாகச்சகொடியவில் வசிக்கும் அச்சிந்த திஸாநாயக்க (வயது-34) என்பவரே உயிரிழ்ந்துள்ளார்.

இறந்த சிவில் பாதுகாப்புப் படை வீரர் அலுத்வத்த காட்டு விலங்குகளைத் துரத்தச் சென்றிருந்தபோது விபத்து நடந்திருக்கலாமென பொலிஸார் தெரிவித்தனர். (ம-250,299)

## வட பகுதியில்...

வியாழக்கிழமை மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகளில் யாழ்.உள்ளிட்ட வடக்கில் எவருக்கும் கொரோனாத் தொற்று உறுதியாகவில்லை என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று 413 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது.

அவர்களில் வடபகுதியில் எவருக்கும் கொரோனாத் தொற்று இல்லை எனவும், முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பேருக்கு மாத்திரம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று 240 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது

அவர்களில் எவருக்கும் தொற்று இல்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-18)

## கொரோனா...

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 185ஆக அதிகரித்துள்ளது.

அகலவத்தை பிரதேசத்தை சேர்ந்த 60 வயதுடைய ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாட்டில் நேற்றும் +588 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். (ம)

## எதிர்வரும்...

டுள்ளனர்.

கடந்த சில நாட்களாக நாட்டின் பல பகுதிகளில் பணம் மற்றும் நகைக் கொள்ளை போன்ற சில சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

எனவே பயணங்களில் ஈடுபடுகின்ற சந்தர்ப்பங்களில் தமது பணம் மற்றும் நகைகள் சம்பந்தமாக மிக அவதானமாக இருக்குமாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ம-3)

## இராணுவம்...

சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ். மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட பாதுகாப்பு கட்டளைத் தளபதியின் பிரதிநிதி, பிரதேச செயலாளர்கள் மற்றும் சுகாதாரப் பிரிவினர் கலந்து கொண்டனர்.

குறித்த கூட்டத்தில் கருத்துரைத்த அரசாங்க அதிபர், "தற்போதைய நிலைமையில் எமது மாவட்டத்தில் தனிமைப் படுத்தலில் உள்ளோரின் எண்ணிக்கை ஐயாயிரத்தைத் தாண்டியுள்ளதுடன் தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

குறிப்பாக உடுவில், தெல்லிப்பழை, சங்கானை, சண்டிலிப்பாய், கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

அத்தோடு, நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவிலும் தொற்று எண்ணிக்கை சற்று அதிகமாகக் காணப்படுகின்றது

நேற்று முன்தினம் நிலைவரத்தின்படி இரண்டாயிரத்து 275 குடும்பங்கள் சுய தனிமைப் படுத்தப்பட்டுள்ளன. இதன்படி உடுவில் பிரதேசத்தில் 406 குடும்பங்களும் தெல்லிப்பளையில் 350 குடும்பங்களும் கோப்பாயில் 260 குடும்பங்களும் சங் கானையில் 163 குடும்பங்களும் தனிமைப்படுத்தலில் உள்ளன.

இந்நிலையில், தனிமைப்படுத்தப்பட்டு உள்ளோருக்கு பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகள் அந்தந்தப் பிரதேச செயலர் பிரிவு ஊடாக வழங்கப்படுகின்றன.

இந்த சூழலில் தனிமைப்படுத்தலில் உள்ளோர் வெளியில் நடமாடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்விடயம் தொடர்பாக ஆளுநர் கவனம் எடுக்குமாறு தெரிவித்துள்ளார்.

இதனால், எதிர்காலத்தில் தனிமைப் படுத்தலில் உள்ளவர்கள் வெளியில் நடமாடாதவாறு கட்டுப்படுத்துவதற்கு இராணுவம் மற்றும் பொலிஸாரின் உதவியுடன் சுகாதாரப் பிரிவினர் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது" என்று தெரிவித்தார்.(ம-33,101)

## நாட்டை முடக்கு...

மேலும் நத்தார் பண்டிகையை முன்னிட்டு இன்று (நேற்று) நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்படவுள்ளதாக வெளி யான செய்தி உண்மைக்கு புறம்பானது என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையை முன்னிட்டு நேற்று நள்ளிரவு முதல் நாடளாவிய ரீதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் படவுள்ளதாக சமூக வலைத்தளங்களில் செய்திகள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

தென்னிலங்கை ஊடகத்திற்கு வழங்கிய விசேட செவ்வியின்போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதிலளித்த அவர் நாட்டை முடக்குவதற்கான தேவை ஏற்படவில்லை எனவும், குறித்த தகவல்களில் எந்த வித உண்மையும் இல்லை எனவும் அறிவித்தார்.

எந்தவித புதிய திட்டங்களும் இதுவரை வகுக்கப்படவில்லை எனவும் இதுவரை தனிமைப் படுத்தல் பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகள் மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் தனிமைப் படுத்தப்பட்டிருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம)

## பெண்...

பாட்டின் அடிப்படையில் இரு பெண்கள் உட்பட 4 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்ட சிறப்பு பொலிஸ் பிரிவினர் நேற்று குறித்த வீட்டை முற்றுகையிட்டு யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த பெண் இருவரும் (28,38 வயதுடையவர்கள்) ஆண் ஒருவரும் விடுதி உரிமையாளரும் என 4 பேரை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர்கள் நால்வரும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்கள் நால்வரும் இன்று யாழ்ப்பாணம் மேலதிக நீதவான் முன்னிலையில் முற்படுத்தப்படவுள்ளனர். (ம)

## பெண்களின்...

மாலை 6.30 மணியளவில் கிறிஸ்மஸ் கரோல் நிகழ்ச்சியில் பங்கேற்ற இரண்டு பெண்களின் மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டிருந்த கைப்பையைத் திருடி, அதிலிருந்த வங்கி (ஏ.ரி.எம்) அட்டைகளைப் பயன்படுத்தி 4 ஆயிரம் ரூபாயுக்கு மதுபானம் கொள்வனவு செய்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதேவேளை, அந்தக் கைப்பையில் 5 ஆயிரம் ரூபாய் பணம் இருந்தது எனவும், தமது தேசிய அடையாள அட்டை வீதியில் வீசப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளது எனவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளனர். (ம)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

### வாசனா சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் 1644 திகதி 2020.12.24

ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 06 25 60 71

### மெகா பவர்

திகதி 24/12/2020 — சீட்டிழுப்பு இலக்கம் 0713

F 08 22 38 41 50

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 24.12.2020 — சீட்டிழுப்பு இலக்கம் 2641

ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 03 24 44 60

### மஹஜன சம்பத

திகதி 2020/12/24 — சீட்டிழுப்பு இலக்கம் 4346

ஆங்கில எழுத்து L — வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 9 9 9 2 7

### தன நிதானய

திகதி - 2020.12.24 — சீட்டிழுப்பு இலக்கம் - 383

D — வெற்றி இலக்கங்கள் 20 29 31 75

### அத கோடிபதி

கிழமை: வியாழக்கிழமை — சீட்டிழுப்பு இல: 1142 — வர்ணம்: கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி: 24.12.2020

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 93,212,200

வெற்றி இலக்கங்கள் 02 66 71 72 — ஆங்கில எழுத்து B

### சனிதா

கிழமை: வியாழக்கிழமை — சீட்டிழுப்பு இல: 3472 — வர்ணம்: சிவப்பு — சீட்டிழுப்பு திகதி: 24.12.2020

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 37,410,357

வெற்றி இலக்கங்கள் 22 28 51 67 — ஆங்கில எழுத்து K

### ராசி — சுப்பர் ஜக்பொட்

திகதி: 24.12.2020 — வெற்றி வாரம்: 3023 — வர்ணம்: மண்நிறம்

வெற்றி இலக்கங்கள் 01 04 17 48 — சிம்மம்

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1316 — நிறம் பச்சை — சீட்டிழுப்பு திகதி 24/12/2020 — தினம் வியாழக்கிழமை

வெற்றி எழுத்தும் இலக்கங்களும் V 29 48 67 76

அடுத்த சுப்பர் ஜக்பொட் 59,677,121

### சம்பத வாசனா — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி வாரம் 395 — திகதி 24.12.2020 — வர்ணம் நீலம்

ஆங்கில எழுத்து L — வெற்றி இலக்கங்கள் 15 17 58 — விதி எண் 4

எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,069,808

# கொரோனா மரணங்களை பயன்படுத்தி அரசும் எதிர்க்கட்சியும் வாக்கு சேகரிக்கின்றன

## மெதகொட அபயதிஸ்ஸ தேரர்

(கொழும்பு)

கொரோனா மரணங்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்பது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினை இனம் அல்லது மத பிரச்சினையாக மாற்றிக்கொள்ளாது, சுகாதார பிரச்சினையாக தீர்த்துக் கொள்ள வேண்டும் என மெதகொட அபயதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்சினையை மிகவும் இலகுவாக தீர்த்துக்கொள்ளமுடியும்என்பதுடன், அதனை அரசியல் பிரச்சினையாக மாற்றிக்கொள்ளக்கூடாது எனவும் கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போது தேரர் கூறியுள்ளார்.

இந்த மரணங்களை தகனம் செய்வதா அல்லது அடக்கம் செய்வதா என்ற பிரச்சினையில், அரசாங்கமும், எதிர்க்கட்சியும் சிறுபான்மை மக்களின் வாக்கு வங்கியை கவரும் வகையில் செயற்படுவது மிகவும் மோசமான நிலைமை.

சிறுபான்மை மக்களை மகிழ்விக்க ஏதேனும் ஒன்றை செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அரசாங்கம் இருக்கின்றது. எதிர்க்கட்சி சிறுபான்மை மக்களின் வாக்குகளை தமது பக்கம் கவர, அவர்களின் பக்கம் இருக்க வேண்டும் என நினைக்கின்றது.

இந்த இடத்தில் நாம் சிக்கலாக்கி கொண்ட விடயம் உள்ளது. சிறுபான்மை மக்களின் வாக்குகளை எதிர்பார்த்து தீர்மானங்களை எடுக்க நடவடிக்கை எடுப்பது மிகவும் மோசமான நிலைமை.

உண்மையில் இது அப்படி செய்ய வேண்டிய விடயமல்ல. இந்த சந்தர்ப்பத்தில் மனித இனத்தின் நலனுக்காக என்ன செய்ய வேண்டும் என்று சிந்திக்க வேண்டும்.

இதனால், அரசாங்கமும், எதிர்க்கட்சியும் அடிப்படைவாத அணிகளின் பல்வேறு சக்திகள் ஊடாக செயற்படும் குழுக்களுக்காக இந்த சுகாதார பிரச்சினையை தேசிய பிரச்சினையாக அல்லது மதப் பிரச்சினையாக மாறும் நிலைமையை உருவாக்க வேண்டாம் என கோரிக்கை விடுக்கின்றோம்.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் கூட மக்களை தம்மிடம் தக்க வைப்பதற்காக அடிப்படைவாதிகளின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் பேசி வருகின்றனர்.

அத்துடன் சுகாதார பிரச்சினையை சுகாதார பிரச்சினையாக தீர்த்துக்கொள்ள முடியாது என்றால், நாட்டு மக்களின் ஞானம் குறித்து மறுபரிசீலனை செய்ய நேரிடும்.

பிரச்சினையை தீர்க்க சுகாதார துறையினருக்கு இடமளிக்கப்பட வேண்டும். விஞ்ஞான ரீதியான ஆய்வுகளிலேயே இந்த பிரச்சினைக்கு தீர்வு இருக்கின்றது. இது தொழிற்நுட்ப ரீதியாக தீர்த்துக்கொள்ள வேண்டிய ஒன்றே அன்றி மத சார்ந்த விடயமல்ல.

விகாரைகளில் உள்ள பிக்குகள், கோயில்களில், தேவாலயங்களில் இருக்கும் மத குருமார் இது குறித்து பேச வேண்டிய அவசியமில்லை.

அரசியல்வாதிகள் இதில் தலையிடும்அவசியமில்லை. சுகாதார பிரச்சினையைத்தீர்க்க சுகாதார அதிகாரிகளுக்கு இடமளியுங்கள் எனவும் மெதகொட அபயதிஸ்ஸ தேரர் குறிப்பிட்டுள்ளார்.

(ம)

# மரண அறிவித்தல்



## சீதேவி நடேஸ்

கரவெட்டி வடக்கு, சேமன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சீதேவி நடேஸ் நேற்று (24.12.2020) வியாழக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2020) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1017)

சேமன் வீதி,
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.

077 961 4738

தகவல்:-
குடும்பத்தினர்

காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக 2 1/4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. (C-1016)

077 436 6704, 077 179 1963

வேலை வாய்ப்பு

அலுவலக செய்தியாளர்கள்

ஆண்கள்

பகல், இரவு கடமை

தகைமை

- க.பொ. த உயர்தரம் கற்றிருத்தல்.
- 25 - 45 வயதிற்கு இடைப்பட்டவர்கள்.
- யாழ். நகரத்தில் இருந்து 6 Km தூரத்திற்குள் வசிப்பவர்கள்.

தொடர்பு

076 097 3121

பொது முகாமையாளர்
வலம்புரி




தேன் ஒரு அருமருந்து. சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்திரோலின் அளவு குறையும், இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.

றோயல் (C-997)

சுத்தமான தேன்

உங்கள் முழுக் குடும்பத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.

ஆய்வு கூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதி செய்யப்பட்டது.




Packed By :
ROYAL INDUSTRY®, JAFFNA.

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா,®
இல. 288, ஆஸ்பத்திரி வீதி,
(சத்திரத்து சந்தி அருகில் )
யாழ்ப்பாணம்.

T.P : 021 222 2567

அண்ணா விரைவுப் பொதிகள் சேவை

பிரான்ஸ் டென்மார்க் பெல்ஜியம் ஜேர்மனி கொலன்ட் ஸ்பெயின் 1100/= 25 kgக்கு மேல் கட்டணம் குறைவு

லண்டன் 1000/= இத்தாலி 1250/=

மேலதிகமாக எவ்வித கட்டணங்களும் வெளிநாட்டில் இல்லை

கனடா- அமெரிக்கா- 1450/= சுவிஸ்- 1350/= (வரி உள்ளடக்கப்படவில்லை)

உங்கள் இடங்களுக்கு வந்து பொதிகள் பெற்றுக் கொள்ளப்படும். (கட்டணம் வேறுபடும்)
பொதிகளுக்கு 20,000ரூபா பெறுமதி வரையான காப்புறுதிக் கட்டணம் இலவசமாக உள்ளடக்கப்பட்டுள்ளது

எம்முடன் இணைந்து பொதிகள் சேவை தொடங்குவதாயின் தொடர்பு கொள்ளவும்

070 330 5500 077 888 9388 075 330 5500

976,கேகேஎஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை சண்டிலிப்பாய் சுன்னாகம் | நெல்லியடி ஆவரங்கால் சங்கத்தானை | புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஒட்டிசுட்டான் | கிளிநொச்சி வவுனியா மன்னார் | கனகராயன்குளம் மல்லாவி துணுக்காய்

விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK- 1025/=Kg

0768226240

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை

(C-899)

பிரத்தியேக, குழு வகுப்புகள்

நீண்ட வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் புதிய கல்வியாண்டிற்கான தரம் 6 - 11 வரையான கணிதம் மற்றும் தரம் 10, 11 இற்கான ICT, வணிகக் கல்வியும் கணக்கீடும் பிரத்தியேக/ குழு/ Online வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (5052)

077 628 6461, 077 645 2622

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.12.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.